DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit



PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



உதயம் 1416 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 26, 2023


# உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா — 2023

நமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 17வது ஆண்டாக நடத்தும் "உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா-2023. எதிர்வரும் யூன் 18ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது

இரண்டு வெளிநாட்டு விருதாளர்களோடு ஐந்து கனடா வாழ் விருதாளர்களும் கௌரவிக்கப்பெறுகின்றார்கள்.

"இளையோர்களுக்கான அடையாளம்" விருதுகளை ஒன்றாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற இரண்டு இளம் வெற்றியாளர்கள் பெறுகின்றார்கள்.

**uthayannews@yahoo.com or www.uthayannews.ca**
**416 732 1608**

## "We have to work with other levels of government, but we don't have to work for other levels of government" *- Toronto Mayoral Candidate Mitzie Hunter*

## "நாங்கள் ஏனைய நிலையில் உள்ள அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும், ஆனால் அந்த அரசாங்களுக்காக வேலை செய்யத் தேவையில்லை"

### *— ரொறன்ரோ மேயர் தேர்தல் வேட்பாளர் மிட்சி ஹண்டர் தெரிவிப்பு*

ரொறன்ரோ மாநகரத்தின் மேயர் பதவிக்காக நாம் போட்டியிடுகின்றோம். எமது வேட்பாளர்களில் சிலர் ஒன்றாரியோ மா-காண அரசின் வேலைத் திட்டங்களுக்கு அல்லது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வேலை செய்யத் தயா-ராக இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால். மேயர் பதவிக்கு தெரி-வு செய்யப்படும் ஒருவர் கனடாவில் உள்ள ஏனைய நிலை அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். இது ஆரோக்கியமான விடயமாகும். ஆனால் அந்த அரசாங்களுக்காக வேலை செய்யத் தேவையே இல்லை.



இவ்வாறு நேற்று முன்தினம் புதன் கிழமை ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெற்ற ரொறன்ரோ மாந-கர சபைக்கான மேயர் பதவிக்கு போட்டியிடுகின்ற முக்கிய வேட்பாளர்களுக்கிடையே நடைபெற்ற விவாத நிகழ்ச்சியில் உரையாற்றிய முன்னாள் ஒன்றாரியோ லிபரல் கட்சியின் அமைச்சர்களில் ஒருவரும் சமூகச் செயற்பாட்டாளருமான மிட்சி ஹன்றர் அவர்கள் தெரிவித்தார்

ஆறு முக்கிய டொராண்டோ மேயர் வேட்பாளர்கள் புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தில் தங்கள் உரை நேரத்தில் ஸ்காபரோவில் போக்குவரத்து, நகர சேவைகள் மற்றும் வரிக-ளின் எதிர்காலம் ஆகியவை தொடர்பாக தங்கள் பார்வைகளை கோடிட்டுக் காட்டியுள்ளனர், ரொறன்ரோ நகரின் கிழக்கு முனை-யாகக் கருதப்படும் ஸ்காபுறோவில் நடைபெற்ற மேற்படி விவாதம் இந்த மேயர் தேர்தலில் முக்கிய விடயமக கருதப்படுகின்றது.

ஸ்காபுறோ பிராந்தியம் என்பது நடைபெறவுள்ள தேர்தலில் ஒரு முக்கிய போர்க்களமாக காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓவ்வொரு வேட்பாளரும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால், பலதரப்பட்ட, மக்கள்தொகை கொண்ட மாவட்டத்தில், நலிவடைந்து வரும் நகர சேவைகள் மற்றும் போக்குவரத்து மற்றும் அண்டை மையங்கள் போன்ற உள்கட்டமைப்புகளை புத்துயிர் அளிப்பதில் கவனம் செலுத்துவதாக அங்கு உரையாற்றினார்கள்.


(தொடர்ச்சி 3ம் பக்கம்)



Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2023

# உதயன் சர்வதேச விருது விழா 2023

## PRESENTED BY


VIBRANT HOSPITALITY GROUP
DEVELOPMENT MANAGEMENT
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
416 270 4343
shankar@vhgcanada.com
vibranthospitalitygroup.com
Toll Free 1 888 674 7770 Local: 905 769 1509

ARABI
RAGEEF SUBRAMANIAM PRESENTS
FINDER
PROJECT ONE

Latika Gold House
(647) 996 5922
www.latikagoldhouse.ca
L7-2900 Markham Road
Scarborough ON M1X 0C8

WINSMART
FACILITY MAINTENANCE SERVICES
President:
Kamalraj Kathirkamanathan
416 821 7870


## CO-PRESENTED BY


K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA

Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

SIVA & JOY REAL ESTATE TEAM
#1 HOMELIFE TEAM IN ONTARIO
KNOWLEDGE - EXPERIENCE - SUCCESS
Siva Shanmuganathan
Joy Selvanayagam
416.545.7482
HomeLife Future Realty Inc., Brokerage

BUY | INVEST | SELL
Happy Home Peace of Life
RECASH REALTOR
RAJEEV SEBARASHA
REALTOR
www.recashrealtor.com
905.226.8515 RE/MAX

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7


UTHAYAN உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2023


President & C.E.O
Kula Sellathurai
Netwyn.Place


## JUNE 18TH 2023

## Sunday, 6.00 PM

## ASSOSIATE SPONSORS


MAHAANS PICK & PRESS OIL MILL INC AND BULK FOOD STORE TEL-416-293-4010

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone : (416) 993-0826
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY


## THIS YEAR'S AWARDS ARE...

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

UTHAYAN LETERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN INTER - COMMUNAL RELATIONSHIP AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
UTHAYAN LEADERSHIP AWARD - ONTARIO
UTHAYAN YOUTH ICON AWARD - ONTARIO
UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - EUROPE
UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - TAMIL NADU

## Scarborough Metropolitan Centre

3840 Finch Ave E, Scarborough, ON M1T 3T4

FOR TICKETS : 416 732 1608


Tasty தமிழா
வியாபார தொடர்புக்கு : 647 762 9512

Canada
We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# வெளிப்படைத் தன்மையும் உண்மையும் இல்லாத இலங்கையின் ஆங்கில, சிங்கள ஊடகங்கள்

இலங்கையில் எத்தனையோ தசாப்பதங்களாக அச்சு ஊடகங்கள் இயங்கிவருகின்றன. கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் நூறு ஆண்டுகளையும் கடந்துள்ளன என்ற செய்திகளையும் நாம் வாசித்தறிந்துள்ளோம். மிகுந்த ஊடகப் பலம் கொண்ட சிறிய தேசமொன்றில் நடுநிலையோ அன்றி ஊடக தர்மம் இல்லாத நிலையிலோ கொழும்புத் தலைநகரிலிருந்து வெளிவரும் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன என்பதை அறிகின்றபோது உள்ளம் வெந்து மௌனத்தை அணைத்துக் கொள்கின்றது.

சுமார் 50-60 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்த் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்கள் இடம்பெற்றபோது அவற்றின் நியாயத் தன்மை தொடர்பாகக் கூட எழுதி நியாயத்தை பெற்றுக் கொடுக்க தென்னிலங்கை ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகள் முன்வரவில்லை என்றும். மாறாக. சிங்களக் காடையர்களால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை 'ஊதிப் பெருப்பிக்கும் வகையில்' தந்திரமான தங்கள் 'ஊடகப் பணியை ஆற்றியதாகவும் நாம் வாசிக்கும் வகையில் தகவல்கள் சிதறிக் கிடக்கின்றன.

இந்த விசமத் தனமான ஊடகப் 'பண்பு' எமது தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதங்களை ஏந்திய வண்ணம் போராடிய விடுதலை இயக்கங்கள் களத்தில் நின்று நியாயமான போராட்டங்களை நடத்தியபோதும், அந்த போராட்டங்களுக்கு இனவாதச் சாயம் பூசப்பட்டு பின்னர் அந்த எழுச்சி மிகு போராட்டம் நசுக்கட்ட 'துன்பியல் அனுபவத்தின்' எச்சங்கள் இன்னும் எம் மக்களைப் பாதித்த வண்ணம் உள்ளன என்றால் அது மிகையாகாது.

சில நாட்களுக்கு முன்னர் அனுஸ்டிக்கப்பெற்ற மே-18 நினைவு நாள் தொடர்பாக தென்னிலங்கையின் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்ததையும் மக்களின் வலிகளுக்கு மருந்து தடவும் காரியங்களை ஆற்றாமல் இனவாதத் தைலம் பூசப்பட்டதான தகவல்களையே நாம் கேள்வியுற்ற வண்ணம் இருந்தோம்.

மே- 2009 இல் உலகத்தில் ஆட்சி பீடததில் அமர்ந்து கொண்டு அநியாயம் செய்கின்ற நாடுகளின் அல்லது அரசியல் தலைவர்களின் திட்ட மிட்ட சதியாக இடம்பெற்ற இன அழிப்பு தொடர்பாக 'மௌனம்' சாதித்த தென்னிலங்கையின் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளை 'விடுதலைப் புலிகளுக்கு வணக்கம் செலுத்தும் அல்லது மரியாதை செய்யும் நாட்களாக சிங்கள மக்களுக்கு காட்ட முனைந்த 'கதைகளையும்' நாம் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் கண்டு மனது வெடித்தது போன்ற உணர்வுகளைத் தழுவி வந்துள்ளோம்.

எமது பத்திரிகையில் தொடர்ச்சியாக பத்தி எழுத்தாளராக பங்களித்து வரும் இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் வி. தேவராஜ் அவர்கள் எழுதியுள்ள இவ்வாரத்து பத்தியில் அவர்கள் தென்னிலங்கை சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களின் வக்கிரப் போக்கை நன்கு சித்தரித்துள்ளார். அவர் பின்வருமாறு எழுதுகின்றார். சிங்கள நண்பர் ஒருவர் ஒருநாள் என்னைச் சந்திப்பதற்கு காரியாலயத்திற்கு வந்திருந்தார்.அவர் வந்த வேளை மன்னாரில் இடம்பெற்ற ஒரு சம்பவத்துடன் தொடர்புடைய படங்களை இணையத் தளத்தில் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மன்னாரில் தாய், சிறுமி, கணவன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கோரமாகக் கொலை செய்யப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தனர். அந்த சிறுமியும் தாயும் கணவனின் முன்னால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உற்படுத்தப்பட்டு மூவரும் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தனர்.

இந்தப் படங்களைப் பார்த்த நண்பர் இந்தச் சம்பவம் எந்த நாட்டில் நடந்தது என்று வினவினார்.அவருடைய கேள்வி எனக்கு ஆச்சரியமாக இருந்தது.நண்பர் இரண்டொரு சிங்களப் பத்திரிகைகளையும் கூடவே ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாங்கிப் படிப்பவர்.

அவருடைய கேள்வி ஆச்சரியமாக இருந்தாலும் இந்தச் சம்பவங்கள் இலங்கையில்தான் மன்னாரில் இரண்டு நாட்களுக்கு முன் நடைபெற்றது என்றேன்.ஆச்சரியமடைந்த நண்பர் நான் ஒவ்வொருநாளும் பத்திரிகைகளை வாசிக்கின்றேன்.தொலைக் காட்சியில் செய்திகளையும் பார்க்கின்றேன். எமது நாட்டில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் இடம்பெறவில்லையே என்றவர் அந்தப் படங்கள் அனைத்தையும் பார்த்து உறைந்து போய்விட்டார்.

திரு தேவராஜின் பதிவு தென்னிலங்கை ஊடகங்கள் பத்திரிகா தர்மம் தொடர்பாக என்ன கோட்பாடுகளை கடைப்பிடிக்கின்றன என்பதற்கு இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் வரிகள் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன என்பதே யதார்த்தமாகும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## "நாங்கள் ஏனைய நிலையில் உள்ள அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும், ஆனால் அந்த அரசாங்களுக்காக வேலை செய்யத் தேவையில்லை" — *மிட்சி ஹண்டர் தெரிவிப்பு*




*(முன் பக்கத் தொடர்ச்சி)*

வேட்பாளர்களில் ஒருவரான சோவும் சக முற்போக்குவாதியான மேட்லோவும், நொறுங்கி வரும் நகர சேவைகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான வரிகள் குறித்து ரொறன்ரோ மக்களின் கருத்துக்களை வேட்பாளர்கள் நேர்மையாக செவிமடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

அன்றைய மேயர் வேட்பாளர்கள் விவாதத்தில் வேட்பாளர்கள் ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்டுடன் எவ்வாறு பணியாற்றுவது அல்லது அவரது நிகழ்ச்சி நிரலுக்கு வேலை செய்யப் போகின்றீர்களா போன்ற கேள்விகளையும் எதிர்கொண்டனர். முன்னாள் பொலிஸ் தலைமை அதிகாரி சாண்டர்ஸ் மற்றும் பெய்லாவோ ஆகியோர் அவர்கள் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களுடன் கொண்டுள்ள நேரடித் தொடர்புகளுக்காக விமர்சனங்களை எதிர்கொண்டனர், அதே சமயம் முற்போக்குவாதிகளான மாட்லோ, சௌ மற்றும் மிட்சி ஹண்டர் ஆகியோர், ஒன்றாரியோ முதல்வருடன் இணைந்து பணியாற்றுவதற்கான அணுகுமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்

ஒரு "இடதுசாரி " மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ரொறன்ரோ நகரமானது நசுங்கிவிடும் என்ற மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளதாக அறியப்படும் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து பல வாக்காளர்கள் கேள்விகளை எழுப்பினர் தொடர்ந்து ஒன்றாரியோ முதல்வரின் சிந்தனைகளை ஆதரிப்பவராக அறியப்பட்ட சாண்டர்ஸ் அவர்களுக்கு எதிராக வேட்பாளர்கள் சிலர் கருத்துக்களைப் பகிர்ந்தார்கள்.

இந்த மேயர் வேட்பாளர்களுக்கிடையிலான விவாதத்திற்கு பல உள்ளூர் சமூக வர்த்தக நிறுவனங்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தன. அவற்றுள் அதிகளவில் தமிழ் பேசும் அன்பரிகளின் வர்த்தக நிறுவனங்கள் இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது..அவர்களில் தமிழர்களின் நிர்வாகத்தில் இயங்கும் சரவணபவன் உணவகம்.- திரு கணேசன் சுகுமார். நெட்வின் நிறுவனம்- குலா செல்லத்துரை. காப்புறுதித் துறை -அஜித் சபாரத்தினம் ஜே.சி. எஸ் பேங்குவற் நிறுவனம்- யூட் மற்றும் தமிழ் வண் தொலைக்காட்சி. மோட்கேஜ் முகவர்- மைக் அகிலன் ஆகியோர் அடங்கியிருந்தார்கள்.

ஸ்காபரோவில் வேட்பாளர்கள் பிரச்சார அலுவலகத்தைத் திறந்து, உள்ளூர் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று வெற்றி பெறவிரும்பும் வேட்பாளர்கள் மாகாண அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே வேலை செய்வார்கள் என்பது தொடர்பாக சபையோர் கண்டனங்களைத் தெரிவித்தனர்.

சொர்க்கம் திருமண சேவை
34 வயது, Canadian Citizen செவ்வாய் குற்றம் அற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. Visa இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
44 வயது கணவனை இழந்த, கனடா citizen, கிறிஸ்தவ பெண்ணுக்கு மணமகன் தேவை. இலங்கையில் இருந்தும் எதிர் பார்க்கிறோம் தான்.
Call: (416) 666-1855

House Cleaning Staff Wanted
House Cleaning Staff Wanted.
Day Shift Only.
( No Evenings Or Weekends)
Please Call
905 472 6042

Business for Sale
Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.
Call:
(416) 543-8170

Help Wanted
Workers needed for renovation company. Must have experience in one of the following:
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு அரச உத்தியோகத்தர்களுக்கு சூழல் பாதுகாப்பு குறித்த கருத்தமர்வு



- மன்னார் நிருபர்

மன்னார் வாழ்வுதய சூழல் பாதுகாப்பு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு திங்கட்கிழமை (22) காலை 10.00 மணி தொடக்கம் 12.30 மணி வரை மன்னார் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர். எம். பிரதீப் தலைமையில் இடம்பெற்ற குறித்த கருத்தமர்வில் மன்னார் நகர பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி திருமதி. ஜே.எம். அன்ரறிடா, "சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், கழிவு முகாமைத்துவம், அரச பணியாளர்களின் கடமைகள்" தொடர்பான கருத்துரை வழங்கினார்.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரி எம். ஜீ. திசர "மன்னார் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணி, அரச சட்டங்கள் மற்றும் சவால்கள்" பற்றிய கருத்துக்களை வழங்கினார்.



இதன் போது வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை செ. அன்ரன் அடிகளார் உரையாற்றுகையில், "உலகம் இன்று காலநிலை மாற்றத்தின் பாரிய விளைவுகளை நாளாந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முகம் கொடுக்கும் விதமாக கூறப்பட்ட கருத்துக்களை அனைத்து அரச சூழியர்களுக்கும் தாம் பணியாற்றும் மக்களுக்கு தெரியப்படுத்தி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அறிந்து கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

பொதுக் கலந்துரையாடலில் அரச உத்தியோகத்தர்கள் தமது வினாக்களுடாக தெளிவுபடுத்தல் களை மேற்கொண்டனர்.

இறுதியில் வாழ்வுதய சூழல் பாதுகாப்புத் திட்டப் பிரிவின் இணைப்பாளர் திரு. ச. யேசுதாசன் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்.

# மன்னார் மாவட்டத்தில் பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் தொடர்பாக மன்னார் அரச அதிபரின் முக்கிய அறிவித்தல்







- மன்னார் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பராமரிப்பின்றி காணப்படும் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை துப்பரவு செய்து சுகாதார துறையினருக்கு உதவி புரிய வேண்டும். அவ்வாறு உதவி செய்ய முன் வராவிட்டால் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி. அ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக உயர் மட்ட அதிகாரிகளுடன் திங்கட்கிழமை (22) மாலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இதனை தெரிவித்தார்

இந்த விடயம் தொடர்பாக அந்த கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து சென்று கொண்டிருக்கையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான அதாவது 5 மாதங்கள் முடிவடைந்த நிலையில் 61 நோயாளர்கள் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் ஆய்வுகளின் அடிப்படையில் நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களின் அடிப்படையிலும் மன்னார் பிரதேசத்தில் எமில் நகர், பெரியகமம், உப்புக்குளம், மூர் வீதி, போன்ற இடங்கள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டு இவற்றுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 25, 26 ,27, ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்பட இருக்கிறது.

இதேவேளை தனியார் காணிகள் பராமரிப்பின்றி வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டு அது தொடர்பாக இந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் காணி உரிமையாளர்களை சில வேளைகளில் கண்டு பிடிப்பதில் கடினமாக இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே காணி உரிமையாளர்கள் இவ்வாறு வெற்றிடமாக காணப்படுகின்ற காணிகளை தூய்மைப் படுத்தி டெங்கு பரவலை தடுப்பதற்கு எமக்கு உதவ முன்வர வேண்டும்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தீர்மானித்துள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி. ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

# இந்தியா புலிகளை வளர்க்கிறதா என வடக்கில் விசாரணை



தமிழீழ விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சியில் இந்தியா தலையிடுகிறதா என்ற விசாரணையை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக வடக்கின் அரசியல் கட்சியொன்று அச்சம் வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் (CTID) இது தொடர்பாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் ஜனநாயக போராளிகளின் கட்சி தெரிவித்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு (ATA) எதிராக உள்நாட்டு மற்றும் சர்வதேச எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில் அரசாங்கம் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

"புலிகள் அமைப்பிற்கு இந்தியா உயிர் கொடுக்கிறதா, இந்தியா பணம் கொடுக்கிறதா, இவர்கள் என்ன செய்ய வேண்டும் அவர்கள் கேட்கிறார்கள், இலங்கை அரசுக்கு எதிராக ஏதாவது செய்கிறார்களா? என பல கேள்விகள் கேட்கிறார்கள்." என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் ஐ.கதிர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து பயங்கரவாத புலனாய்வு அதிகாரிகள் தனது யாழ்ப்பாண வீட்டிற்கு வந்து நான்கு மணித்தியாலங்கள் ஐம்பது நிமிடங்கள் விசாரணை நடத்தியதாக அவர் கூறுகிறார்.

அவரது குடும்ப உறுப்பினர்களை அச்சமடைய வைக்கும் வகையில் இரண்டாவது முறையாக அவரிடம் விசாரணை நடத்திய பயங்கரவாத விசாரணை அதிகாரிகள், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாடுகள் மற்றும் அதில் இந்தியாவின் தலையீடுகள் குறித்து கேட்டறிந்துள்ளனர்.

"பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட இந்தியா நிறைய உதவி செய்திருந்தாலும், இலங்கை அரசு இந்தியாவுடன் வெளிப்படையாக நல்லெண்ணத்தைக் காட்டுகிறது, ஆனால் உள்ளுக்குள் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு உள்ளது".

இந்திய சார்பு மனப்பான்மைக் கொண்ட ஜனநாயக போராளிகள் கட்சியினர் கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழித்தல், மாகாண சபைகளுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் கையகப்படுத்துதல், பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

"இந்த மாநாடு குறித்தும் நீண்ட நேரம் கேள்வி எழுப்பப்பட்டது. இந்திய அதிகாரிகளுடன் இந்த விவகாரங்களை நான் விவாதித்தேன் என்பது அனைவரும் அறிந்த உண்மை".

போராளிக் கட்சி கடந்த எட்டு வருடங்களாக ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசியலில் ஈடுபட்டு வருகின்றது.

"சில தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து எமக்கு எதிராக சதி செய்கின்றன. எனினும் இது குறித்து அறிக்கை தயாரித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஏனைய தூதரகங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் வழங்குவோம்." என்கிறார் கட்சியின் செயலாளர்.

# ஆறு வயது பாடசாலை மாணவியை காட்டுக்குள் கடத்தி சென்று துஸ்பிரயோகம் செய்த இராணுவ ‘மிருகத்திற்க்கு’ நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்பு

ஆறு வயது பாடசாலை மாணவி மதிய நேரம் பாடசாலை விட்டு வந்த போது அவரை காட்டுக்குள் கடத்தி சென்று து்'பிரயோகம் செய்த நெடுங்கேணி இராணுவ முகாமின் இராணுவக் கோப்ரலுக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.
இது தொடர்பான வழக்கு வியாழக்கிழமை (25) வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த 14.05.2013 அன்று பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சிறுமியை ஆட்கடத்தல் புரிந்த குற்றச்சாட்டும், சிறுமியை கடத்தி துஸ்பிரயோகம் செய்த இரண்டாவது குற்றச்சாட்டும் என சட்டமா அதிபரினால் இரு குற்றச்சாட்டுகள் நிரம்பிய குற்றப் பத்திரிகை வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மாணவி வெள்ளை சீருடையில் இரத்தம் படிந்த நிலையில் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டமை, விசேட சி.ஐ.டி பொலிஸ் அணி இராணுவ சிப்பாயை கைது செய்தமை, கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாயை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியமை, நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாம் கட்டளை அதிகாரி நீதிமன்றிற்கு சாட்சியமளித்தமை, காட்டுக்குள் இருந்து சிறுமியின் சப்பாத்துக்கள் மீட்கப்பட்டமை, இறுதியாக சட்ட வைத்திய அதிகாரியின் சட்ட வைத்திய அறிக்கை என்பவற்றை வைத்து கைது செய்யப்பட்ட நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாமின் இராணுவ கோப்ரலை குற்றவாளி என நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.



அத்துடன் அவருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட மாணவிக்கு 5 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும், அதனை கட்டத்தவறின் இரண்டு ஆண்டு கடூழிய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படவும் மற்றும் தண்டப்பணம் பத்தாயிரம் ரூபா கட்ட தவறினால் இரு மாத கடூழிய சிறைத்தண்டனை என்றும் வவுனியா மேல் நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
மேலும், இலங்கை குற்ற புலனாய்வு பிரிவின் தலைமை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க தலைமையிலான குழுவினர் கொழும்பிலிருந்து வவுனியா சென்று குற்றவாளியான இராணுவ கோப்ரல் அதிகாரியை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

**- மன்னார் நிருபர்**

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா புதன்கிழமை (24) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதன் போது உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் பூஜைகள் இடம் பெற்றது. அதனை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள் வீதி வலம் வந்து கொடித் தம்ப பூஜை இடம் பெற்று அதனை தொடர்ந்து கொடி தாம்பத்திற்கு அபிஷேகம் செய்து ஆராதனைகள் இடம்பெற்றது. பின்னர் சுப வேளையில் கொடியேற்றம் இடம் பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலைமையில் கொடியேற்றம் இடம் பெற்றது. இதன் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 1 ஆம் திகதி தேர் திருவிழாவும் 2 ஆம் திகதி தீர்த்த திரு விழாவும் இடம்பெறும். மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 10 நாட்கள் திருவிழாவும் நடைபெறவுள்ளது


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இந்தியா செய்திகள் India News

# விஷச்சாராய விவகாரத்தில் விளம்பரம் தேடும் ஆளுநர் ஆர்.என்.ரவி – முரசொலி விமர்சனம்



விஷச்சாராய விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி விளம்பர வெளிச்சம் தேட முற்பட்டுள்ளதாக திமுகவின் அதிகாரப்பூர்வ நாளேடான முரசொலி விமர்சித்துள்ளது.

விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் விஷச் சாராயம் குடித்து 20-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், தமிழ்நாடு அரசிடம் விளக்கம் கேட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி கடிதம் எழுதியிருந்தார். இது தொடர்பாக முரசொலி வெளியிட்டுள்ள கட்டுரையில், நடந்தவை குறித்த முழு விபரங்களை அரசு அதி-காரியை தொடர்புகொண்டு அறிந்திருக்க முடியும் என்ற சூழலில், ஊடகங்களில் அறிக்கை வெளியிட்டது ஆளுநரின் விஷமத்தனத்தை வெளிக்காட்டும் விதமாக உள்ளது என தெரிவித்துள்ளது. பாஜக ஆளும் குஜராத், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் மாநிலங்களில் நூற்றுக்கணக்கானோர் விஷச்சாராயம் குடித்து பலியானபோது, அங்குள்ள ஆளுநர்கள் விளக்கம் கேட்டு அறிக்கை வெளியிட்டனரா என்பதை ஆர்.என்.ரவி அறிந்திருக்க வேண்டாமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளது. விஷச்சாராய விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி விளம்பர வெளிச்சம் தேட முற்பட்டுள்ளதாகவும் விமர்சித்துள்ளது. அரசியல் தெளிவு, வரலாறு அறியாத ஒருவர் தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதாக விமர்சித்துள்ள முர-சொலி, ஆளுநர் ஆர்.என்.ரவி தனது பதவிக்குரிய தகுதியை சீரழிக்கும் வேலையை தொடர்ந்து செய்து வருவதை நிறுத்துவது நாட்டுக்கு நல்லது என குறிப்பிட்டுள்ளது.

# கர்நாடக படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம் ரூ.2000 நோட்டுகளை திரும்பப்பெற்றது குறித்து முதல்வர் ஸ்டாலின் கடும் விமர்சனம்!



"ரூ.2,000 நோட்டுகளை திரும்பப்பெற்ற நடவடிக்கை கர்நாடக படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்தான் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. அதனை மாற்றுவதற்கு ஏதுவாக இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் வெளியிடப்பட்டதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது. அதற்கான தேவை நிறைவடைந்த நிலையில், கடந்த 2018-19 ஆம் ஆண்டில் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று, சுமார் 6 லட்சத்து 73 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருந்ததாக ஆர்.பி.ஐ. தெரிவித்துள்ளது. ஆனால், கடந்த மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, சுமார் 3 லட்சத்து 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் மட்டுமே புழக்கத்தில் இருப்பதாக ஆர்.பி.ஐ. குறிப்பிட்டுள்ளது. மேலும் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் பெரும்பாலான பண பரிவர்த்தனைகளில் இடம்பெறவில்லை என்றும் ஆர்.பி.ஐ. கூறியுள்ளது. இந்நிலையில், பொதுமக்களிடம் இருக்கும் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெற ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. அதன் படி, வரும் 23 ஆம் தேதி முதல், இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் மாற்றிக்கொள்ள ஆர்.பி.ஐ. அறிவுறுத்தியுள்ளது. அதேநேரம்இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை குறித்து அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் ஆதரவாகவும், எதிரா-கவும் கருத்து தெரிவித்துவருகின்றனர். அந்த வகையில் 2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப்பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவிப்புக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது பதிவில் தெரிவித்துள்ளதாவது: 500 சந்தேகங்கள், 1000 மர்மங்கள், 2000 பிழைகள்!

கர்நாடகப் படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்!" என பதிவிட்டுள்ளார்.

# 10 – ம் வகுப்பு தேர்வில் 437 மதிப்பெண்கள்: இரண்டு கைகளையும் இழந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவன் சாதனை



கிருஷ்ணகிரி மாவட்டம் சோக்காடி கிராமத்தை சேர்ந்தவர்கள் கஸ்தூரி - அருள்மூர்த்தி தம்பதியினர். இவர்களது மகன் கீர்த்தி வர்மா. இவர் நான்கு வயதில் வீட்டின் மாடியில் விளையாடியபோது எதிர்பாராத விதமாக வீட்டை ஒட்டி சென்ற மின் கம்பியை பிடித்துள்ளார். அப்போது மின்சாரம் தாக்கி கீர்த்தி வர்மா தனது இரண்டு கைகளையும் இழந்துள்ளார். மகனின் இந்த நிலையை கண்ட அருள்மூர்த்தி வீட்டை விட்டு சென்று விட்டார். இதனால் எந்த ஆதரவும் இல்லாததால் கஸ்தூரி தனது இரண்டு கைகள் இல்லாத மகனுடன் வேப்பனப்பள்ளி அருகே உள்ள ஜினூர் கிராமத்தில் உள்ள தனது பெற்றோர் வீட்டிற்கு வந்து கூலி வேலை செய்து மகனை படிக்க வைத்தார். இரண்டு கைகளும் இல்லை என்றாலும் தன்னம்பிக்கையை கைவிடாத கீர்த்திவர்மா நெடுமருதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 10-ம் வகுப்பு படித்தார்.

இந்த நிலையில் வெளியான 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவன் கீர்த்திவர்மா 437 மதிப்பெண்கள் எடுத்து பள்ளி அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார். இரண்டு கைகள் இல்லாவிட்டாலும் தன்னம்பிக்கையுடன் போராடி சாதனை படைத்த மாணவனை அவரது தாய் கஸ்தூரி மற்றும் ஆசிரியைகள் இனிப்பு வழங்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இது குறித்து மாணவன் கீர்த்திவர்மா கூறுகையில், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 437 மதிப்பெண் பெற்றுள்ளேன். இந்த மதிப்பெண் எடுக்க காரணமாக இருந்த பெற்றோர், ஆசிரிய, ஆசிரியைகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார். மாற்றுத்திறனாளி மாணவர் கீர்த்தி வர்மாவின் சாதனையை அறிந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், கீர்த்தி வர்மாவின் தாயாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். மேலும், அந்த மாணவனுக்கு தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும், உயர்கல்வி படிப்பதற்கான உதவிகளையும் அரசு செய்து தரும் என உறுதி அளித்தார்.

சினிமா


# கிருத்திகா உதயநிதியுடன் கைக்கோர்க்கும் ஜெயம் ரவி?



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வரும் ஜெயம் ரவி வித்தியாசமான கதைக்களங்களை தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். மணிரத்னம் இயக்கத்தில் இவர் நடித்த "பொன்னியின் செல்வன்" இரண்டாம் பாகம் நல்ல வரவேற்பை பெற்றது. தொடர்ந்து "இறைவன்", "சைரன்" போன்ற படங்களில் மும்மரமாக நடித்து வருகிறார்.

இந்நிலையில், ஜெயம் ரவியின் அடுத்த படத்தின் இயக்குனர் குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இவரின் அடுத்தப்படத்தை "வணக்கம் சென்னை", "காளி", "பேப்பர் ராக்கெட்" போன்ற படங்களின் மூலம் கவனம் ஈர்த்த கிருத்திகா உதயநிதி இயக்கவுள்ளதாக கூறப்படுகிறது. நித்யா மேனன் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்துக்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கவுள்ளதாகவும் ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், விரைவில் படப்பிடிப்பு தொடங்கும் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நடிகர் சரத்பாபு மறைவு



தமிழ்த்திரைப்பட நடிகரும், அருமை நண்பருமான திரு. சரத்பாபு அவர்கள் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்த தகவல் மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது.

1977 ஆம் ஆண்டு "பட்டினிப்பிரவேசம்" என்ற திரைப்படத்தின் வாயிலாக தமிழ் திரையுலகில் அறிமுகமான பல்துறை நடிகரும் எளிமையாக பழகக்கூடிய குணச்சித்திர நடிகரான சரத்பாபு தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் நடித்தவர்.

தமிழ் திரைப்படங்களில் வேடன், மகாபிரபு, கேப்டன் போன்ற திரைப்படங்களில் அவருடன் இணைந்து பணியாற்றிய தருணங்களை நினைவுகூறுகிறேன்.

தமிழ்த் திரையுலகில் தனி அடையாளத்துடன், ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி பிரிந்திருக்கும் சரத்பாபு அவர்களின் மறைவால் வேதனையில் வாடும் அவரது குடும்பத்தார்க்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், திரைத்துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ரா. சரத்குமார்
நிறுவனத் தலைவர்

# தமிழ்ப் படங்களில் தொடர்ந்து நடிக்க ஜெர்மன் தமிழாசிரியை ஆர்வம்



விஜய் சேதுபதி, மேகா ஆகாஷ், மகிழ் திருமேனி, கனிகா உட்பட பலர் நடித்துள்ள படம் "யாதும் ஊரே யாவரும் கேளிர்". வெங்கட கிருஷ்ண ரோகாந்த் இயக்கியுள்ள இந்த படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்திருக்கிறார் மதுரா. அவர் கூறியதாவது:

இப்போது ஜெர்மனியில் இருக்கிறேன். என் அம்மா, யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். அப்பா ஜெர்மனிக்காரர். நான் ஜெர்மனியில் வழக்கறிஞருக்கான பட்டப்படிப்பை முடித்து பயிற்சியில் இருக்கிறேன். சிறு வயதில் இருந்து தமிழ் மொழி, பரதம், கர்னாடக சங்கீதம், மிருதங்கம் அனைத்தையும் கற்றேன். ஜெர்மன் பிராங்பேர்ட் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியையாகவும் பணியாற்றுகிறேன். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மாடலிங்கும் செய்கிறேன்.

என் மாடலிங் வீடியோ பார்த்து "யாதும் ஊரே யாவரும் கேளிர்" படத்தில் வாய்ப்பு கிடைத்தது. தமிழ் சினிமாவில் நடித்ததை நினைத்து பெருமைப்படுகிறேன். தமிழ் அகதிகளின் வலியை சொன்ன படத்தில் நடித்ததை இன்னும் பெருமையாக கருதுகிறேன். விஜய் சேதுபதி, விவேக் ஆகி-யோருடன் நடித்தது சிறந்த அனுபவம். தொடர்ந்து தமிழில் நடிக்க ஆர்வமாக இருக்கிறேன். நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள கேரக்டரை விரும்புகிறேன்.

இவ்வாறு மதுரா கூறினார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்தில் கலைப் பீடாபதி பேராசிரியர் ரகுராம் அவர்களைச் சந்தித்த கனடா உதயன் உலகச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன்

தற்போது இலங்கைக்கு ஊடகப் பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்றுள்ளகனடா உதயன் உலகச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்தில் கலைப் பீடாபதி பேராசிரியர் ரகுராம் அவர்களைச் நட்பின் நிமித்தம் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார். அப்போது இலண்டன் எழுத்தாளரும் வானொலி துறை விற்பன்னருமான விமல் சொக்கநாதன் அவர்களும் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது கலை இலக்கியம் மற்றும் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் செயற்பட்டுவரும் ஊடக கற்கை நெறிக்களுக்கான பிரிவு ஆகியவை தொடர்பாக இருவரும் உரையாடினார்கள்.

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள விமல் சொக்கநாதன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவிற்கு கலைப் பீடாபதி பேராசிரியர் ரகுராம் அவர்கள் தலைமை தாங்குகின்றார் என்பதும் அதில் கனடா உதயன் உலகச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.





# உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தினால் புதிதாக பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை – பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குறித்த பகுதிக்கு விஜயம்

- மன்னார் நிருபர்





மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542வது படைப் பிரிவினால் அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்க ராணுவத்தினால் வேலைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், குறித்த நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் புதிதாக இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் திங்கட்கிழமை (22) மதியம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்தார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பல பாகங்களிலும் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறது. அதன் அடிப்படையில் மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542வது படைப்பிரிவினால் அப்பகுதியில் புதிதாக ஒரு பௌத்த விகாரை யை அமைக்க ராணுவத்தினால் வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

இவ்விடயத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். தொடர்ச்சியாக மக்கள் மத்தில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக காரணங்களாக உள்ளது.மன்னாரில் 5 பௌத்த விகாரைகள் உள்ளது.

மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் போன்ற இடங்களில் உள்ளது. ஆனால் இங்கே பௌத்த குடும்பங்கள் 50 கூட இல்லை.

பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்த விடையத்தை உடனடியாக நான் புத்த சாசன அமைச்சர் உடைய கவனத்திற்கும், மாவட்ட திணைக்கள அதிகாரிகளுக்கும் இவ்விடயம் குறித்து தெரியப்படுத்துகின்றேன்.

மக்களிடம் இருந்து எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது. குறித்த பிரதேசத்தில் இராணுவத்தினால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தனர்.

இந்த நிலையிலே நேரடியாக குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன். என அவர் மேலும் தெரிவித்தார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

# சர்க்கரை ஆலையும் நெடுங்கேணியை சூழும் நெருக்கடியும்

**- நடராசா லோகதயாளன்**

**சி**ந்தித்து செயற்படுவது என்பது இலங்கை அரசின் இலக்கணத்தில் என்றுமே இருந்ததில்லை என்பதை ஒவ்வொரு விடயத்திலும் எந்த அரசியல் கட்சி அல்லது தலைவராக இருந்தாலும் நிரூபித்து வருகின்றனர்.

அது அரசியல் கொள்கை வகுப்பாக இருக்கலாம், பொருளாதார திட்டங்களாக இருக்கலாம் அல்லது எந்தவொரு மக்கள் நலன் சார்ந்த பணிகளாக இருக்கலாம். இந்த திட்டமிடலில் உள்ள குறைபாடு மற்றும் தொலைநோக்கு பார்வை இல்லாத காரணத்தால் இன்றளவும் நாடு சமூக-பொருளா-தார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

இதற்கு அண்மையில் அரசு முன்னெடுத்துள்ள ஒரு திட்டத்தை மேலும் ஓர் உதாரணமாக கூற முடியும். வவுனியா மாவட்டத்தில் சீனி உற்பத்தி ஆலை ஒன்றை ஏற்படுத்தவும், அதற்கு தேவையான கரும்பை அருகிலுள்ள மாவட்டங்களில் சாகுபடி செய்யவும் ரணில் விக்ரமசிங்க அரசு முன்வைத்து அதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பித்துள்ளன.

ஆனால், இந்த திட்டம் மற்றும் அதன் சாத்தியக்கூறு குறித்து எந்தளவிற்கு ஆராயப்பட்டது என்பதில் பல கேள்விகள் உள்ளன.

நெடுங்கேணியில் ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளவுள்ள சீனித் தொழிற்சாலைக்கான நிலத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் தாக்கம் எப்படியிருக்கும் என்பது மக்களிடையே பேசுபொருளாகியுள்ளது.

கடந்த வாரம்-மே 18 அன்று தமிழ் மக்கள் கொடூரமாக முடிந்த யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக முள்ளிய்வாய்க்கால் தொடக்கம் பல பகுதிகளில் தமது அஞ்சலிகளை செலுத்திவந்த நேரத்தில், ஜனாதிபதியில் செயலாளர் மெய்நிகர் வாயிலாக பங்குபெற்ற கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதுவும் தமிழர் தாயகப் பகுதியில் ஒரு ஆலையை அமைப்பது தொடர்பான கூட்டம் அது. அந்த கூட்டமும் திட்டமிட்ட நேரத்திற்கு ஒன்றரை மணி நேரத்தின் பிறகே தொடங்கியுள்ளது.

இந்த கலந்துரையாடல் வவுனியா வடக்கிலே ஓர் முதலீட்டிற்கான நிலம் தொடர்பானது என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் அதன் அடிப்படையில் மாவட்டச் செயலாளர் வவுனியா வடக்கு பிரதேச செயலாளரையும் இணைத்துக்கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி விகரமசிங்க வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோரிடம் "அங்கு சர்க்கரை ஆலை அமையவுள்ளது. அதற்கான நிலம் உடனடியாக வழங்கப்பட வேண்டும்" இது எனது கண்டிப்பான உத்தரவு என்று கூறியுள்ளர்.

இதற்கமைய நெடுங்கேணி நைனாமடுவில் ஓர் சீனித் தொழிற்சாலையினை அமைக்கும் அதேநேரம் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் கரும்புத் தோட்டங்கள் அமைத்து அவற்றை நெடுங்கேணியில் அமையும் தொழிற்சாலைக்கு வழங்கத் திட்டமிடப்படுகின்றது.

இவ்வாறு 18ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலொ) பேச்சாளரான சுரேன் குருசாமி மட்டும் ஒரேயொரு அரசியல்வாதியாக கலந்துகொண்டுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் 19ஆம் திகதி காலை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளர் கே.எஸ். விஜயகீர்த்தியின் 16ஆம் திகதிய கடிதத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலாளர்களுடன் மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலாளர்களிடையே இடம்பெற்ற கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படவேயில்லை. வெறுமனே கரும்புச் செய்கைக்கு ஏற்ற அதிக இடங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியிலேயே உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் வனவளத் திணைக்களத்துடன் பேசி அவற்றை விடுவிப்பதாகவே முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 18ஆம் திகதி கூட்டம் தொடர்பில் எனக்கு எதுவுமே தெரியாது என ஆரம்பத்தில் மறுத்த சுரேன் குருசாமி தற்போது தானும் ஓர் சீனித் தொழிற்சாலையின் சிரேஸ்ட துணைத் தலைவர் எனவும் அது தாய்லாந்தில் பதிவு செய்த நிறுவனம் எனவும் கூறுகின்றார். இதனால் இத்திட்டத்திற்கும் சீனாவிற்கும் தொடர்பு இல்லை என்க் கூற முற்படுகின்றனர்.

இவ்வாறு சீனாவிற்காக ஒருபகுதி நிலம் பிடிக்க முற்படும் சமயம் தமது பிடி தளர்ந்துவிடுமோ என இன்னுமோர் தரப்பு எண்ணுகின்றது. இதனால் சீனாவைத் தொடர்ந்து சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளும் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் கால் பதிக்கும. நோக்கில் இடங்களைத் தேர்வு செய்கின்றனர்.




இலங்கையின் வடபகுதியில் போரின் காரணமாக அதிக மக்கள் இடம்பெயர்ந்தமையினால் குடிசன அடர்த்தி குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக அதிக நிலங்கள் வெறுமையாகவும. வனப் பகுதியாகவும் காட்சியளிக்கின்றன.

இவற்றை காரணமாக வைத்து முதலீடு என்னும் பெயரில் சீனா - தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட ஓர் சீனித் தொழிற்சாலையை நெடுங்கேணி நைனாமடுப் பகுதியில் ஆரம்பிக்கும் அதே நேரம் அயல் பகுதிகளில் அதிகளவு கரும்புச் செய்கையை ஊக்குவித்து அதற்கான நீரை மகாவலி ஊடாக கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்காக நைனாமடுவில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கிய நிலங்கள் தற்போது வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன. அவற்றை விடுவித்து அந்த சீன-ித் தொழிற்சாலைக்கு வழங்குமாறு 2023-05-18 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களிற்கு நேரில் உத்தரவிட்டிருந்தார்.

இதேநேரம் நெடுங்கேணி மற்றும் டொலர்பாம், கென்பாம் பகுதிகளை அண்டி காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் மேலும்
2000 ஏக்கர் நிலம் உள்ளதனால் அவற்றையும் வெளிநாடுகளிற்கு வழங்க அமைச்சர் காதர் மஸ்தான் முனைப்பு காட்டி வருகின்றார்.

இதற்கமைய கடந்த வாரம் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர்களை காதர் மஸ்தான் சகிதம் இப்பிரதேசங்களிற்கு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ் மாவட்டச் செயலக அதிகாரிகள் நேரில் அழைத்துச் சென்று காண்பித்துள்ளனர். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# கனடாவில் கலாநிதி வே. இலகுப்பிள்ளை அவர்களின் "அணுவைத் துளைத்து" நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவரும் அணு விஞ்ஞானியும் பேராசிரியரும் தொழிலதிபரும் கனடிய அரசியல் செயற்பாட்டாளருமான கனடா வாழ் கலாநிதி வே. இலகுப்பிள்ளை அவர்களின் "அணுவைத் துளைத்து" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28-05-2023 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4.00 மணிக்கு ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவிற்கு ஓய்வு பெற்ற அதிபர் சின்னையா சிவனேசன் அவர்கள் தலைமை தாங்குகின்றார்.

மேலதிக விபரங்களுக்கு இத்துடன் காணப்படும் அறிவித்தலைப் பார்க்கவும்.


*புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவர், அணு விஞ்ஞானி, பேராசிரியர், தொழிலதிபர், சமூக சேவையாளர், கனேடிய அரசியல் செயற்பாட்டாளர்*

## கலாநிதி இலகுப்பிள்ளை வேலுப்பிள்ளை

*அவர்களின்*

## "அணுவைத் துளைத்து"

## நூல் வெளியீட்டு விழா



இடம்: ஸ்காபரோ கொன்வென்ஷன் சென்டர் (Scarborough Convention Centre)
காலம்: 28-5-2023 (மே மாதம்) பிற்பகல் 4 மணி
தலைவர்: சின்னையா சிவநேசன்
(சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர், அண்ணாமலை, கனடா, மேனாள் அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

தமிழ் தாய் வாழ்த்து, தேசிய கீதம்
செல்விகள் சத்திய சங்கவி முகுந்தன், சத்திய சாம்பவி முகுந்தன்

அகவணக்கம்

1. வரவேற்புரை: திருமதி நாகேஸ்வரி சிறீகுமரகுரு (தமிழ் மொழியியல் விரிவுரையாளர், அண்ணாமலை கனடா)
2. அறிமுகவுரை: ஜெகன் மயில்வாகனம் (நிறுவுனர், இயக்குனர், ஸ்காபரோ கொன்வென்ஷன் சென்டர்)
3. தலைமையுரை: திரு சின்னையா சிவநேசன்
4. வாழ்த்துரைகள்:
   1. திரு. நடா ராஜ்குமார் (நிறுவுனர், இயக்குனர், கிழக்கு எஃப் எம் ஒலிபரப்புக் குழுமம்)
   2. திரு ஹரி ஆனந்தசங்கரி (நாடளுமன்ற உறுப்பினர் (ஸ்காபரோ ரூச் பார்க் தொகுதி)
   3. திரு லோகன் கணபதி (மாகாணசபை உறுப்பினர் (மார்க்கம் தோண்ஹில் தொகுதி)

5.வெளியீட்டுரை: பேராசிரியர் வண. ஜோசப் சந்திரகாந்தன் (இறையியல் துறை, தொரொன்ரோ பல்கலைக்கழகம்)
6.நூலாய்வுரை: பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி (தமிழ், மொழியியல் துறைப் பேராசிரியர், அண்ணாமலை, கனடா)
7.நூலும் நூலாசிரியரும்: ஊடகப் பார்வை
1. திரு. நா. லோகேந்திரலிங்கம் (நிறுவுனர், பிரதம ஆசிரியர் - உதயன், தமிழ் வார இதழ்)
2.திரு. கணபதி ரவீந்திரன் (நிறுவுனர், இயக்குனர் - யுகம் வானொலி)

8.பாராட்டுக் கவிதை: கவிஞாயிறு வென்சிலாஸ் அனுரா (நிறுவுனர், வென்மேரி அறக்கட்டளை)
9.பாராட்டுரை அறிஞர் சாமி அப்பாத்துரை (சமூக சேவையாளர், எழுத்தாளர்)
"அணுவைத் துளைத்து" ஒரு கண்ணோட்டம்
10.அன்புரை: 'நான் கண்ட இலகுவான ஆளுமை'
திரு. இளைய பாரதி - (நிறுவுனர், இயக்குனர், ஒலிபரப்பாளர், கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CTBC)
11.ஏற்புரை: நூலாசிரியர் - பேராசிரியர் இலகுப்பிள்ளை வேலுப்பிள்ளை
(ஓய்வு நிலை அணு விஞ்ஞானி, கனேடிய அணுசக்தி ஆணைக் கழகம், ஒட்டாவா)

12.நன்றியுரை: திருமதி வரதலட்சுமி கோவிந்தபிள்ளை
(ஓய்வு நிலை சிரேஷ்ட விஞ்ஞானி தரக்கட்டுப்பாட்டுத் துறை - Sanofy Pharmaceuticals)

13.நூல் வெளியீடு:

முதற்பிரதி பெறுவோர்:
1. திரு . கிரிதரன் திருஞானசம்பந்த மூர்த்தி
(ஓய்வு நிலை பிரதம கணக்காளர், காணூஸ் கூட்டுத்தாபனம், சவுதி அரேபியா)
2.திருமதி கானலோஜினி சிறீதரன் (ஓய்வு நிலை மனிதவள மேலாளர், ஒட்டாவா கல்விச் சபை – Ottawa District School Board)

விசேட பிரதிகள் பெறுவோர்

அவையினருக்கு பிரதிகள் வழங்கல்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஐக்கிய நாடுகள் சபையிடம் நீதி கோரி வெளிநாட்டவர்கள் கொழும்பில் போராட்டம்




இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டு அகதிகள் தமக்கு எந்த நாட்டிலும் நிரந்தர வதிவிடத்தை வழங்குமாறு கோரி கொழும்பில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

"நியாயத்தை வழங்கு" என கோஷத்தை எழுப்பியவாறு நடத்திய போராட்டத்தில் சிறுவர்களும் பங்கேற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய, இலங்கையில் உள்ள பல பாகிஸ்தானிய குடும்பங்கள், நிரந்தர பதிவினை விரைவுபடுத்துமாறும், வீட்டுவசதி, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைச் செலவு பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தின.

அவர்களின் கைகளில் ஆங்கிலத்திலும் உருது மொழியிலும் எழுதப்பட்ட, "அகதிகளை மரணத்திற்கு திருப்பி அனுப்பாதீர்கள், அகதிகளும் மனிதர்களே" என வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களும் புகலிடக் கோரிக்கையை முன்வைத்தவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, வழங்கப்படும் நிவாரணத்தை குறைத்து கொழும்பில் உள்ள ஐ.நா அகதிகள் அலுவலகம் மூடப்படும் என தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அச்சமடைந்துள்ளனர்.

"பாகிஸ்தான், மியன்மர், ஆப்கானிஸ்தான், சிரியா, ஏமன், நைஜீரியா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த 800 பேர் அகதிகளாக இலங்கையில் தங்கியுள்ளனர். அவர்கள் சட்ட ரீதியாகவே இலங்கையில் உள்ளனர். அந்த நபர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமே பொறுப்பு" என சமூக மற்றும் அமைதி மையத்தின் மனித உரிமை ஆர்வலர் ருக்கி பெர்னாண்டோ கூறுகிறார்.

இரண்டு முதல் 10 வருடங்கள் வரை, வெளிநாட்டு அகதிகளாக அவர்கள் நீர்கொழும்பு, பாணந்துறை, தெஹிவளை மற்றும் கல்சிசை ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் மியன்மரில் பௌத்த இராணுவ ஆட்சியில இருந்து தப்பிய ரோஹிங்கியாக்கள், மேலும் சிலர் பாகிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பிடியில் இருந்து தப்பிய கிறிஸ்தவ மற்றும் பிற சிறுபான்மை இஸ்லாமிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

அரசியல், மத மோதல்கள் மற்றும் போர்களின் விளைவாக, அவர்கள் பிறந்த நாடுகளிலிருந்து தப்பிய மக்கள், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்டு அவர்களின் உறுப்பு நாடுகளில் குடியேற்றப்பட்டு, பின்னர் தெரிவு செய்யப்பட்ட நாட்டில் நிரந்தர குடியிருப்புக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இவர்களுக்கு பல ஆண்டுகளாக உதவித்தொகை கிடைக்கவில்லை கவலை எழுந்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் குறைப்புகள் ஏற்படுமா என்ற சந்தேகம் இவர்கள் மத்தியில் உள்ளது. என மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கையில் வாழும் வெளிநாட்டு அகதிகளில் பெரும்பான்மையானவர்கள் சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் மற்றும் மருந்தாளர்களாக காணப்படுகின்ற போதிலும் அவர்களுக்கு இலங்கையில் வேலை செய்யும் உரிமை இல்லை.

பாடசாலை செல்லும் வயதில் உள்ள சிறுவர்கள் கல்வியை இழந்துள்ளதால், அவர்களை விரைவில் நிரந்தர குடியிருப்பாளர்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வேண்டும் என போராட்க்காரர்கள் கோரியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இன அழிப்புப் போரினால் நாட்டை விட்டு வெளியேறிய மக்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்து பல வருடங்களாக இந்தியா, நேபாளம், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.



# கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை – சிறுநீரகத்தில் நிறைந்த கல் மீட்பு

- மன்னார் நிருபர்

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது கல் ஒன்று அகற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் ஏ. டபிள்யூ. எம். சமீம் தலைமையில் நடைபெற்ற சத்திர சிகிச்சையின் போதே இந்த விசித்திரமான கல் சிறுநீரகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது டன் அர்ப்பணிப்புடன் சேவை வழங்கிய ஏனைய வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் சத்திர சிகிச்சை நிபுணர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வைத்தியசாலையின் வளர்ச்சியில் வைத்திய அத்தியட்சகர் இரா. முரளீஸ்வரன் நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.





# மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்தியவர் கைது

மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்தி சென்ற இளைஞனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இன்று ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக எடுத்து செல்லப்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது பெரிய நீலாவணை பகுதியை சேர்ந்த 19 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சிவப்பு நிற ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் உட்பட கடத்தி செல்லப்பட்ட 20,000 மில்லி லீட்டர் கசிப்பு உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் பிரதான வீதியில் உள்ள பெரிய கல்லாறு பகுதியில்



அமைந்துள்ள விசேட சோதனை சாவடியில் வைத்து கைதானார்.


இந்த நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை பதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி நெத்தசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் மேற்பார்வையில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான அதிகாரிகள் மற்றும் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் புலனாய்வு பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.




மேலும் கைதான சந்தேக நபர் மற்றும் சான்று பொருட்கள் யாவும் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்க விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கனேடிய அரசு மற்றும் அதன் பிரதமர் மீது இனவாதத்தை உமிழ்ந்த இலங்கை அமைச்சர்

- சிவா பரமேஸ்வரன்




**ஒ**வ்வொரு ஆண்டும் மே மாதம் 18ஆம் திகதியை தமிழின படுகொலை நாளாக கனடா அறிவித்துள்ளதற்கு இலங்கை நாடாளுமன்றத்தில் கடும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. தமிழர் தரப்பு கனேடிய பிரதமருக்கு நன்றி கூற, சிங்கள தரப்பில் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தது.

இனப்படுகொலை என்ற வார்த்தையைக் கேட்டாலே இலங்கை அரசிற்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் ஒவ்வாவை ஏற்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு தகாத அல்லது கேட்கப்படக்கூடாத வார்த்தையாகவே உள்ளது என்பதை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அந்த வாதப்பிரதிவாதங்களின் போது காண முடிந்தது.

கனடாவிற்கு 156 ஆண்டுகால வரலாறே உள்ளது என்று அந்நாட்டையும் அதன் பிரதமர் ஜஸ்டின் டிரூடோவையும் இழிவுபடுத்தும் வகையில் இலங்கையின் இனவாத அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் கூறினார். அவர் தெரிவித்த கருத்திற்கு தமிழர் தரப்பில் பரந்துபட்டளவில் கண்டனம் எழுந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற தமிழின படுகொலையை கனடா அங்கீகரித்துள்ளது சரியானது என்று அதை வரவேற்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உரையாற்ற சரத் வீரசேகர மற்றும் விமல் வீரவன்ச கோஷ்டியினருக்கு ரத்த அழுத்தம் எகிறியது.

உக்கிரமான அந்த போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மக்களிற்கு ஒரு தீர்வையோ அல்லது போரின் போது இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக்கூறவே இதுவரை அரசாங்கம் எந்த காத்திரமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை., மிகவும் கொடூரமாக இடம்பெற்று 2009 மே 18 அன்று ரத்தக்களறியுடன் போர் முடிவடைந்த நாளை தமிழினப் படுகொலை நினைவு நாளாக அனுசரிப்பதற்கு கனடா முடிவெடுத்துள்ளதற்கு அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் டிரூடோவிற்கு சிவஞானம் சிறீதரன் நன்றி தெரிவித்து நாடாளுமன்றாத்தில் உரையாற்றினார்.

உடனடியாக சிங்கள இனவாதிகளான அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் எதிர்க்குரல் எழுப்பி இனவாதத்தை கக்க ஆரம்பித்தனர். அவர்கள் அப்பட்டமான இனவாதத்தை வெளிப்படுத்தி அரசியல் இலாபம் தேட முயல்கிறார்கள் என்பது அவர்களின் நாடாளுமன்ற உரையில் தெரிந்தது.



"ஈழத்தமிழர்கள் மீது கனேடிய பிரதமருக்கு கரிசனை இருந்தால், ஈழத்தைந் ஏன் கனடாவின் அமைக்க கூடாது" என்று நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர குதர்க்கமாக கேள்வி எழுப்பினார். அவர் கூறியதை கேட்டு அவையில் இருந்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களே சிரித்ததை நேரலையில் காணக்கூடியதாக இருந்தது. கனேடிய தமிழ் மக்களின் வாக்குகளிற்காகவே மே 18 ஆம் திகதியை தமிழின படுகொலை நினைவு நாளாக அந்நாட்டு நாடாளுமன்றம் அறிவித்துள்ளது என்று தனது வழமையான இனவாதன பாணியில் தெரிவித்தார்.

மேலும் தனது மேதாவிலாசத்தை வெளிப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு "எவ்விதமான ஆதாரங்களும் இன்றி கேள்விப்பட்டதன் அடிப்படையில் மட்டுமே, இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றது என்று அறிவிப்பது வளர்ந்த நாடான கனடாவிற்கு அவமானம் ஆகும்" என்று தனது இனவாதத்தை உமிழ்ந்தார். பூர்வகுடி மக்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்காக கனேடிய அரசு மன்னிப்பு கேட்டதெல்லாம் இந்த இனவாதிகள் அறிந்திருக்கவில்லை என்பதே யதார்த்தம்.

"கனடா கொன்றொழித்த அனைத்து பூர்வகுடி மக்களின் நினைவாக ஏன் கனேடிய இனப்படுகொலை நாள் ஒன்றை அனுசரிக்க கூடாது" என்று தனது மிகவும் புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைத்து அவர் கேள்வி எழுப்பினார். கனடாவில் நடைபெற்ற தேசிய விசாரணை ஒன்றில் "பெண்கள் மற்றும் சிறுமிகள் அழித்து இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்பதை கண்டறிந்தது" என்ற சரத் வீரசேகர உலகிற்கு மனித உரிமைகள் குறித்து வகுப்பெடுக்கும் கனடா, மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டிற்கு ஆளாது நம்ப முடியமல் இருக்கிறது என்றார். யாரோ எழுதிக் கொடுத்ததை அவர் வாசிக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. கடற்படை தளபதியாக பொறுப்பான பதவியில் இருந்த அவர், நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு முன் என்ன பேசுகிறோம், அது சரியானதா, தான் கூறும் விஷயங்களில் உண்மை உள்ளதால், அது பின்னால் தவறு என்று தெரியவந்தால் எப்படி சமாளிப்பது? இதை பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

போர், போர்க்குற்றம், இனப்படுகொலை, பொறுப்புக்கூறல் ஆகியவை எல்லாம் இலங்கையில் தடை செய்யப்பட்ட சொற்கள் போலிருந்தது அவரது பேச்சு.

அவர் மட்டுமல்ல வரலாறு தெரியாமல் உளறுவதில் இலங்கை அரசியல்வாதிகள் தமது முட்டாள்தனத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது. அதற்கு நல்லதொரு உதாரணம் கனடா தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து.



"கனடா உருவாக்கப்பட்ட ஒரு நாடு. அந்நாட்டிற்கு 156 ஆண்டு வரலாறு மட்டுமே உள்ளது. இப்போது இந்த குற்றச்சாட்டுகள் எல்லாம் எதற்காக? இலங்கையில் ஈழத்தை உருவாக்குவதற்கே. இந்தியா தமது நாட்டில் தனி தமிழ் தேசம் அமைய இடமளிக்காது. அதேபோன்று இலங்கையில் நாங்களும் தனி ஈழம் அமைய இடமளிக்க மாட்டோம். ஆனால் ஜஸ்டின் ட்ரூடோ தொடக்கம், அங்கிருக்கும் மாகாண சபைகள் வரை தமிழர்கள் மீது அனுதாபதம் இருப்பதாக காட்டும் நோக்கில் தனி ஈழம் குறித்து பேசுகின்றனர். கனடா சுமார் 10,000 சதுர மில்லியன் கிலோ மீட்டர் பரப்பரளவு கொண்ட நாடு. ஆனால் இலங்கையோ 65,610 சதுர கிலோமீட்டர் மட்டுமே நிலப்பரப்பு கொண்ட நாடு. சனத்தொக்கை நெருக்கத்தை பொறுத்தவரை கனடாவில் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 4.1 மக்களும், இலங்கையில் 341 மக்களும் உள்ளனர். கனடாவில் 81% நிலப்பரப்பு ஆளில்லாமல் உள்ளது. எனவே கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உண்மையில் தமிழர்கள் மீது கரிசனை கொண்டவரானால், ஈழத்தை அங்கு அமைக்கலாமே" என்று கனடாவையும் அதன் பிரதமரையும் இழிவுபடுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

ஆனால், கனடாவில் மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக உள்நாட்டு யுத்தம் ஒன்று நடைபெறவில்லை. சர்வதேச நியமங்களிற்கு மாறாக சொந்த நாட்டு மக்களையே வான் தாக்குதல் மூலம் கொன்றொழிக்கவில்லை. ஆயிரக்கணக்கானவர்களை அகதிகள் முகாம்களில் அடைத்து வைக்கபட்டவில்லை. அரச படைகளிடம் சரணடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போன வரலாறு கனடாவில் இல்லை. இப்படியன சூழலில் இரு நாடுகளையும் ஒப்பிடுவதாக நினைத்துக் கொண்டு சரத் வீரசேகர போன்றோர் கருத்துக் கூறுவதை அறிவிலித்தனத்தின் உச்சகட்டம் என்றே எண்ணத்தோன்றுகிறது.

கனேடிய மக்களையும், அதன் பிரதமரையும் திட்டித் தீர்த்துவிட்டதாக கருதிக்கொண்டு சரத் வீரசேகர தனது ஆசனத்தில் அமர அடுத்ததாக இனவாத அரசியலையே தனது அடிநாத கொள்கையாக கொண்டுள்ள மற்றொரு அரசியல்வாதியான விமல் வீரவன்சவும் கனடாவையும் அதன் பிரதமரையும் நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தார்.

"இலங்கையில் இடபெற்றது இனப்படுகொலை என்று கூறியதன் மூலம் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இலங்கையை அவமானப்படுத்திவிட்டார்" என்றார் விமல் வீரவன்ச. கனடாவில் பூர்வகுடிகளாக வாழ்ந்த செவ்விந்தியர்களை இனப்படுகொலை செய்தது மட்டுமல்லாம், 1996 ஆம் ஆண்டு மீதமிருந்த செவ்விந்தியர்களின் குழந்தைகளையும் இனப்படுகொலை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டினார் இனவாதி விமல் வீரவன்ச.



கனடாவில் மிகப்பெரிய மனித புதைகுழியொன்றில் செவ்விந்தியர்களின் எலும்புக்கூடுகளின் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த தினம் ஜுன் மாதம் 21 ஆம் திகதி. "இனப்படுகொலைகள் ஏதும் இடம்பெறாத இலங்கையில் அப்படி இடம்பெற்றதாக கனேடிய அரசாங்கம் இனப்படுகொலை நாள் என்று ஒரு தீர்மானத்தை கொண்டுவரும் போது, ஏன் கனடாவில் இனப்படுகொலை நடந்த ஜுன் 21 ஆம் திகதியை கனேடிய இனப்படுகொலை நாள் என்று இலங்கையில் அனுசரிக்க தமது நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை இயற்ற வேண்டும்" என்று நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் கோரியுள்ளார் விமல் வம்ச. இதன் மூலம் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகவில்லை என்ற போலிப் பிரசாரத்தை அவர் மீண்டும் ஒருமுறை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

செல்வந்த ஏழு நாடுகளில் ஒன்றாகத் திகழும் கனடா, பூர்வகுடி மக்களிற்கு ஏற்பட்ட துன்பங்கள் தொடர்பில் தனது மக்களிடம் மன்னிப்பு கோரியது. ஆனால், இலங்கை அரசு இதுவரை போரினால் பாதிக்க மக்களிடம் மன்னிப்பு கோரவில்லை என்பதை இந்த இரு இனவாதிகள் அறிந்திருப்பார்கள். இலங்கையில் ஜே வி பி கிளர்ச்சியின் போது ஆயிரக்கணக்கான சிங்களவர்களும் கொல்லப்பட்டனர். பலர் இன்னும் தமது வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள், அந்த சிங்கள மக்களிடம் கூட இலங்கை அரசு மன்னிப்பு கோரியதில்லை என்பதை இவர்கள் அறிந்திருப்பார்களா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

கனடா இலங்கைக்கு பல ஆண்டுகளாக செய்துவந்த உதவிகளை எல்லாம் மறந்து இனவாதத்தை கக்கும் நோக்கில் இந்த இருவரும் நாடாளுமன்றத்தில் உரையாற்றியது இரு நாடுகளிற்கு இடையே இருக்கும் உரசலான உறவை மேலும் மோசமாக்க கூடும்.

சரத் வீரசேகர மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு தைரியம் இருந்தால் ஜுன் 21 ஆம் அதிதியை கனடாவில் இடம்பெற்ற இன அழிப்பு நாளாக அனுசரிக்க இலங்கை நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றட்டுமே. முதலில் அப்படியான ஒரு தீர்மான முன்வடிவு நாடாளுமன்றத்திற்கு விவாதத்திற்கு வருகிறதா என்று பார்ப்போம்.

சபையறிந்து பேச வேண்டும், சமயமறிந்து பேச வேண்டும், அனைத்திலும் பார்க்க பேசுவதைவிட பேசாமல் இருப்பது நலம் என்பதையும் அரசியல் என்பது சினிமா அல்ல என்பதை இந்த இனவாத அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வவுனியாவில் "மாணவர்களை இலக்கு வைத்து குண்டுதாரிகள்" என்ற தகவலால் பரபரப்பு

வவுனியா நகர பகுதிக்குள் மாணவர்களை இலக்கு வைத்து குண்டுதாரிகள் வந்துள்ளதாக இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய காவலாளியிடம் தெரிவிக்கப்பட்ட தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்திற்கு வியாழக்கிழமை (25) சென்ற இருவர் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தியதுடன், பாடசாலையின் காவலாளியை அழைத்து மாணவர்களை இலக்கு வைத்து இந்த பகுதிக்குள் இரண்டு குண்டுதாரிகள் நடமாடித் திரிவதாகவும், இதனால் மாணவர்களை கூட்டமாக வெளியில் நடமாடித்திரிய வேண்டாம் என்று கூறிச் சென்றுள்ளனர்.

குறித்த தகவலை கடமையிலிருந்த காவலாளி பாடசாலையின் அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் கேட்டபோது, பொலிசார் என அடையாளப்படுத்திய இருவர் மேற்குறித்த தகவலை காவலாளியிடம் கூறிச் சென்றதை உறுதிப்படுத்தி இருந்தார். இதனால் அங்கு பரபரப்பான நிலை ஏற்பட்டது.

அத்துடன், பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில்



வவுனியா பாடசாலைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அச்சமடையத் தேவையில்லை எனவும் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# பனிக்கன்குளம் ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது







முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் அமர்ந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்து வரும் ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் புதன்கிழமை (24) சிறப்பாக இடம்பெற்றது.

புதன்கிழமை காலை சங்காபிஷேகம் இடம்பெற்று பகல் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து இரவு விசேட பூசைகள் இடம்பெற்று வசந்த மண்டப பூசையை தொடர்ந்து எம்பெருமான் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்தார்.

பக்தர்கள் காவடி, பால்செம்பு, கற்பூரசட்டி என நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றிக்கொண்டனர்.

# சர்க்கரை ஆலையும் நெடுங்கேணியை சூழும் நெருக்கடியும்

- நடராசா லோகதயாளன்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

*அவ்வகையில் நெடுங்கேணி மற்றும் டொலர்பாம், கென்பாம் பகுதிகளில் நிலங்களைப் பார்வையிட்ட சவுதி அரேபியா உள்ளிட்ட முதலீட்டாளர்கள் குழு ஏற்கனவே கிளிநொச்சியில் கௌதாரிமுனையிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணியில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலங்களைப் பார்வையிட்டு அவை பொருத்தமற்றவை என நிராகரித்த நிலையில் நெடுங்கேணி, டொலர்பாம், கென்பாம் பகுதிகளில் உள்ள நிலங்கள் வளம் மிக்கவை என்னும் அடிப்படையில் அவற்றைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர்.*

*இவ்வாறு இந்த நாடுகள் தேர்வு செய்யும் இடங்கள் 1981ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களாக இருந்தவை. அங்கிருந்த தமிழ் மக்கள் போரின் காரணமாக விரட்டியடிக்கப்பட்டமையே இந்த நிலங்கள் வெறுமையாக காட்சியளிப்பதற்கு காரணமாக உள்ளது என்பதே யதார்த்தமான களநிலைமை. தமிழர்களின் பூர்விமான இந்த இடங்களை அபகரித்து இப்பகுதி மக்களிற்கோ அல்லது இந்த மாவட்ட மக்களிற்கோ அல்லாது பிற நாட்டவர்களிற்கு வழங்க இரகசிய முயற்சி இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.*

*மிகவும் வேகமாக நில ஆக்கிரமிப்பிற்கான தயார்படுதல்கள் இடம்பெறும்போது அனைவரும் படுத்துறங்கிவிட்டு அங்கே பாரிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு திறப்பு விழாக்கள் அறிவிக்கும் போதே தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்காதே எனக் கோசம் போட்டு போராட்டம் நடாத்துவர்கள் என நெடுங்கேணி கமக்கார அமகப்பின் தலைவர் நெரிவிப்பதோடு இதற்கு எதிராக நெடுங்கேணி விவசாயிகள் விரைவில் வீதியில் இறங்கிப் போராட திட்டமிடுகின்றோம் என்கின்றார்.*

*இதேநேரம் நெடுங்கேணியில் சீனித் தொழிற்சாலையும் அயலில் அதிக கரும்புத் தோட்டமும் வந்தால் பல ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பாக அமையும் எனக் கூறப்படுகின்றபோதும் இவ்வாறான திட்டத்தை எதிர்ப்பவர்களில் மிக முக்கியமானவரான சூழலியலாளரும் பசுமை இயக்கத் தலைவருமான பொன் .ஐங்கரநேசனை இது தொடர்பில் கேட்டபோது இந்த திட்டம் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று என்றார்.*

*"வடக்கு மாகாண சபை இருந்த போதும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றனர். நாம் அதற்கு இணங்கவில்லை. காரணம் கரும்புச் செய்கை மேற்கொள்வதானால் நெற் செய்கையினை விடவும் 3 மடங்கு நீர் தேவை. அங்கே தற்போது சிறு குளங்கள் மட்டுமே உள்ளதனால் சிறு போகத்தின்போது நெற் செய்கைக்கே நீர் கிடையாது. மாரி மழைகாலத்தில் வெள்ளம் அதிக நீர் ஓட்டம் என்பதனால் கரும்புச் செய்கையும் கடினமானது அதனால் சிறுபோக காலத்திலேயே மேற்கொள்ள வேண்டும். இதனால் நீர்த் தட்டுப்பாடு எனத் தெரிவித்து அப்பகுதிகளிற்கு நீர் விநியோகம் என்னும் போர்வையில் மகாவலி நீர் திருப்பப்படும் அதன் பின்பு அப்பகுதிகள் யாவுமே மகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு செல்லப்பட்டு தமிழ் மக்களின் இருப்பே கேள்விக்குறியாகும். இதனை நன்கு உணர்ந்தவர்கள்கூட அரசின் கைக்கூலிகளாக மாறி போரினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான வேலை வாய்ப்பு என்னும் மாயையின் கீழ் தமது பொக்கற்றை நிரப்ப முயல்கின்றனர்" என்றார்.*

*மகாவலி அதிகார சபை வருவதனால் தமிழ் மக்களிற்கு என்ன பாதிப்பு அதன் கீழும் காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்று நில உருத்தை உறுதி செய்ய முடியாதா என நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டேன்.*

*"இலங்கையில் மகாவலி அதிகார சபை கொண்டு வரப்பட்டதன் பின்பு 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு இந்த அதிகார சபை நிலம் வழங்கி அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளது. இருப்பினும் இதில் தமிழர்கள் 45 குடும்பங்கள்கூட கிடையாது. இதனால் இந்த அதிகார சபை மீது தமிழர்கள் கொண்டுள்ள கோபமும் ஐயமும் நியாயமானது" என்றார்.*

*விவசாய வல்லுநர்களும் இந்த சர்க்கரை ஆலை திட்டம் தோல்வியில் முடியும் சாத்தியமே அதிகம் என்று கூறுகிறார்கள். மூலப் பொருளான கரும்பு தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யாமல், எப்படி ஒரு சர்க்கரை ஆலையை தொடர்ந்து இலாப நோக்கில் நடத்த முடியும் என்று கேள்வி எழுப்புகின்றனர்.*

*கரும்பு சாகுபடி மற்றும் சர்க்கரை உற்பத்தில் முன்னணியில் இருக்கும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கூட இந்த விடயத்தில் தொடர்ச்சியக சிக்கலை எதிர்கொள்ளும் போது இலங்கையால் இதை கையாள முடியது என்றும், தமிழர்களின் நிலம் பறிபோவதை தவிர இதில் வேறு எந்த பயனும் இருக்க வாய்ப்பில்லை என்கிறார்கள்.*



கனடிய செய்திகள் Canadian News

# கனடியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தமிழின அழிப்பு நினைவு நாள்

இலங்கை அரசினாலும் அதன் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்படும் தமிழின அழிப்பு உலகறிந்தது. வருடத்திலும். வைகாசி 18 (May 18) அன்று தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வில் நீதிக்காக உறுதி கொள்வதும் தமிழின அழிப்பில் இழந்தோரை நினைவு கூறுவதும் வழக்கம். கனடாவில் கடந்த 2022 வருடம் தமிழின அழிப்பு நினைவு நாள் மற்றும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகள் ஆகியவை தமிழின அழிப்பு என கனடிய பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் ஒன்டாரியோவில் தமிழின அழிப்பு கல்வி வாரம் 2021 முதல் சட்டமாகவும் உள்ளது.

இந்த வகையில் கடந்த. மே 18, 2023 அன்று ஒட்டாவா தமிழ் ஒன்றியத்தினால் பாராளுமன்ற செய்தி அரங்கில் கனடா தமிழ் அமைப்புகள் சார்பாக அறிக்கை ஒன்று வழங்கப்பட்டது. அன்று இரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்த பல ஒட்டாவா தமிழ் அமைப்புகள் இணைந்த தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த வருடம் 2023 இல் கனடிய பிரதமர் தனது அரசின் முதல் தமிழின அழிப்பு நினைவு நாள் அறிக்கையை வெளியிட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.




















# 'சிங்களச் சிந்தனையுடன்' தமிழர்களை ஆள நினைக்கும் தமிழ் தலைமைகள்!

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• தொல் பொருள் திணைக்களத்தை கைப்பற்றியுள்ள துறவிகள்.

• எல்லாளனின் சமாதியில் துட்டகமுனுவின் அஸ்தியைத் தேடியவர்கள் இந்து ஆலயங்களில் பௌத்த எச்சங்களைத் தேடுகின்றனர்.

• இலங்கை சிவ பூமி மாத்திரமல்ல தமிழ் பௌத்த பூமியும்தான்!

மனிதாபிமானத்துக்கான போர் முற்றுப் பெற்று 14 வருடங்கள் உருண்டோடிவிட்டன.

1. தமிழர்களின் பிரச்சனைகள் தீரவில்லை
2. தமிழ் மக்களிடையே கட்டி எழுப்பப்பட்டிருந்த ஒற்றுமை, கட்டுக்கோப்பு ஒழுக்கம் என்பன காணாமல் போயிற்று
3. தமிழ் மக்களிடையே கட்டிக் காக்கப்பட்டு வந்த சமூகப் பாதுகாப்பு காணாமல் போயிற்று.
4. வாள்வெட்டுக் கலாசாரத்திற்குள்ளும் போதைப் பொருள் பாவனைக்குள்ளும் இளைஞர் அணி இழுபட்டுக் கிடக்கின்றது.
5. போதையில் இருந்து காப்பாற்றித் தாருங்கள் என பெற்றோர் பிள்ளைகளை பொலிசில் ஒப்படைக்கும் யுகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
6. கொள்ளை கொலைகள் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன.
7. போதையில் தறி கெட்ட கூட்டத்தின் காம வெறிக்கு வயது வித்தியாசமின்றி பலியாகும் பெண்ணாய்ப் பிறந்த பாவங்கள்.
8. கல்வி பறி போய்விட்டது.
9. காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலையும் பெற்றோர் உறவினர்கள் தமது தேடுதல் பயணத்தில் தமது உறவுகளைக் காணாமலே உயிரை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மொத்தத்தில் மனிதாபிமானத்துக்கான போர் விடுதலை செய்த தமிழ் மக்கள் போரின் குருதிச் சேற்றுக்குள் இருந்து இன்னும் மீள முடியாதுள்ளனர். மரண ஓலங்கள் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் போர் தின்ற எச்சங்களாக வலி சுமந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.




"செல்" துகள்களும், வெடித்து உயிர்ப் பலி கொண்ட குண்டுகள் எஞ்சியவாகளின் உடல்களில் இன்றும் நினைவுச் சின்னங்களாக புகுந்து கொண்டு அவர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றன.

மறுபுறம் தமிழர் தாயகத்தில் புத்தர் விருப்பமின்றியே குடிவைக்கப்படுகின்றார்.

தொல் பொருள் திணைக்களத்திற்கு நிலப் பசி எடுத்துவிட்டது. ரத்தக் காட்டேரியாக தமிழர் நிலத்தை விழுங்கி ஏப்பம் விடுகின்றது.

• தொல் பொருள் திணைக்களத்தை கைப்பற்றியுள்ள துறவிகள்.

இதற்கும் அப்பால் அரசுக்குள் அரசாக நின்று பௌத்த துறவிகள் வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பால் தொல்பொருள் திணைக்களம் க'ட்டப்படக் கூடாதென நிதி உதவி வழங்குகின்றனர். நாட்டில் எத்தனையோ "பன்சலைகள்" பணமின்றி தமது அன்றாட மதக் கடமைகளையே செய்ய முடியாது உள்ள நிலையில் தொல்பொருள் திணைக்களம் கஷடப்படக் கூடாதென நிதியுதவி அளிப்பது வியப்பாக இருக்கின்றது. பௌத்த துறவிகள் அரசாங்கத்திற்குள் ஒரு அரசாங்கமாக செயற்படுவதையே இது காட்டுகின்றது. தொல் பொருள் திணைக்களத்தை மீட்டெடுக்க முன் வந்த பரோபாகாரிகளான பௌத்த துறவிகள் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஏன் முன்வரவில்லை என்பது தெரியவில்லை.

• புத்தரையும் விகாரைகளையும் காவித் தரியும் படைத் தரப்பு

தனது போர் வெறியை வெற்றி மூலம் தீர்த்துக் கொண்ட அசோகன் தம்மபதத்தை கையிலெடுத்தான். இங்கோ தம்ம பதத்தை அல்ல புத்தரின் பெயரில் விகாரைகளாகவும் குடியேற்றங்களாகவும் தமிழர் தாயகத்தில் படைத்தரப்பு காவித் திரிகின்றது.

எல்லாளனின் சமாதியில் துட்டகமுனுவின் அஸ்தியைத் தேடியவர்கள் தொடர்ச்சியாக இன்று இந்து ஆலயங்களில் பௌத்த எச்சங்களைத் தேடத் தொடங்கிவிட்டனர்.

நீங்கள் கிண்டிப் பார்க்கும் மண்ணை சற்று கீழ் நோக்கித் தோண்டுங்கள் திராவிட எச்சங்கள் வரும். தமிழர்கள்தான் இலங்கையின் மூத்த குடிகள் என்பதை உறுதிப்படுத்தும்.

• பௌத்தம் உங்களுக்கு மாத்திரம் சொந்தமில்லை. தமிழர்களுக்கும் சொந்தம்.

இலங்கை சிவ பூமி மாத்திரமல்ல தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த பூமியாகவும் இலங்கை இருந்துள்ளது.



புல்கலைக் கழக மூத்த பேராசிரியரிடம் அரச உயர்பீடம் வடக்குக் கிழக்கில் பௌத்தம் இருந்ததென்று சொல்லுங்கள் ஆனால் தமிழ் பௌத்தம் இருந்ததென்று கூறாதீர்கள் என்று கேட்டுக் கொண்டதாம்.பௌத்த சான்றுகளைத் தேடுவதற்கு அரச மேலிடத்துக்கு தமிழ் பேராசிரியர்களையும் துணைக்கு அழைக்க வேண்டிய தேவையுள்ளது.

• பௌத்த பூமியாக்கும் திட்டம்

2030 ஆம் ஆண்டுக்குள் வடக்குக் கிழக்கை பௌத்த பூமியாக்கும் திட்டத்தை "அரகலய" சற்று தாமதப்படுத்தியுள்ளது. அதேவேளையில் பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து இந்தத் திட்டத்தை மேலும் தாமதப்படுத்தியுள்ளது. ஆனால் தற்போது "அரகலயா" மற்றும் பொருளாதார நெருக்கடிகளையும் மேவி இந்தத் திட்டத்தை துரிதப்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்தப் பயணத்தில் 2030க்குள் மாகாண எல்லைகளை முற்று முழுதாக மாற்றி அமைக்கும் திட்டத்தையும் கைவசம் வைத்துள்ளனர். மாகாண எல்லை மீளமைப்பதில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெரும்பாலான மாவட்டங்கள் தென் பகுதிகளுடன் இணைப்பதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. இதற்கான வரைபுகளை பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளனர்.

• மறைந்த அதி வணக்கத்துக்குரிய ஆண்டகை ராயப்பு சோசப் அவர்களின் தீர்க்கதரிசனம்

2009 அம் ஆண்டு போர் முற்றுப் பெற்றவுடன் கேசரிக்காக மறைந்த அதி வணக்கத்துக்குரிய ஆண்டகை ராயப்பு சோசப் அவர்களை நேர் காணல் செய்திருந்தேன்.

ஆந்த நேர் காணலில் மறைந்த ஆண்டகை அவர்கள் உண்மையான முள்ளி வாய்க்னால் ஊழித் தாண்டவம் இனிவரும் காலங்களிலேயே நடைபெறப் போகின்றது என்று குறிப்பிட்டதுடன் இது 2009 முள்ளிவாய்க்கால் படுகொலையை விட மிக மோசமானதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் இருப்பு, மொழி, கலாசாரம், குடிப் பரம்பல் என தமிழ் மக்களின் ஒட்டு மொத்த ஆன்மாவையே சிதைத்து விடக் கூடியது என்று கூறிச் சென்றுள்ளார். அது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

• தமிழர்களுக்கு தலைமைத்துவம் இல்லை.

துரதிஷடவசமாக தமிழ்மக்களை அணி திரட்டி பேரினவாதச் சக்திகளின் இந்த நகர்வுகளை தடுத்து நிறுத்தக் கூடிய தலைமைத்துவத்தை தமிழ் மக்கள் கொண்டிருக்கவில்லை. தமிழ்த் தலைமைகள் பரபரப்புக்கான செய்திகளை உருவாக்கி ஊடகங்களில் இடம்பிடித்து நாடாளு மன்ற மாகாண சபைகளுக்கான நாற்காலிகளுக்காகப் பிரிந்து நின்று முட்டி மோதிக் கொள்கின்றன.

தமிழ் மக்கள் தமக்கு சரியான தலைமைக்கு வாக்களித்து தெரிவு செய்ய வேண்டும். அந்த சரியான தலைமை தாம் தான் என தமிழ்த் தலைமைகள் தம்மைத் தாமே தமிழ் மக்களிடையே ஏலம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

• வீராப்புடன் தமிழ்த் தலைமைகள் களத்தில்

தையிட்டியில் விகாரை அமைப்பதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தாது அமைதி காத்த தமிழ்த் தலைமைகள் விகாரைக்கான கட்டுமான வேலைகள் முற்றுப் பெற்ற நிலையில் வீராப்புடன் களத்தில் இறங்கி தமிழ் மக்களிடம் வசனம் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இனி வரும் காலங்கள் தேர்தல் காலங்களாக இருப்பதால் தையிட்டி விவகாரத்தை வைத்து தமது தேர்தல் பிரசார களத்தைத் திறந்துள்ளனர். இனி வரும் காலங்கள் தேர்தல் பரப்பரைகளுக்காக இவ்வாறு பல களங்களை தமிழ்த் தலைமைகள் திறந்து விடத் தயாராகி விட்டன.

முள்ளி வாய்க்காலில் 14 வருடங்களுக்கு முன் தேசியத்துடன் மக்களும் மடிந்து கொண்டிருந்த போது அமைதியாக மௌனம் காத்தவர்கள்தான் இன்று களத்தில் நிற்கும் தமிழ்த் தலைமைகள். இந்தத் தலைமைகள்தான் மண்ணையும் மக்களையும் பலி கொடுத்துவிட்டு 2009க்குப் பின் 14 வருடங்களில் தமிழ்த் தேசியத்தையும் படு கொலை செய்துவிட்டு சிங்கள மக்களின் மனங் கோணாத அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

• ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா

இந்தத் தலைமைகள் எவ்வித இழப்புக்களையும் சந்தித்தவர்கள் அல்ல. எவ்வித உதவிகளையும் செய்தவர்களும் அல்ல என்று தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தெற்கின் அரசியலுக்கு எது தேவையோ குறிப்பாக ரணில்விக்ரமசிங்கவுக்கு எது தேவையோ அதனை கன கச்சிதமாகச் செய்கின்றனர்.

• தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்தது

தமிழ்த் தலைமைகளும் தமிழ் மக்களும் ஒன்றாகப் பயணிக்க வேண்டும். போராட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இல்லை. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சியில் உள்ள அடி மட்ட தொண்டர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழரசுக் கட்சி தனித்து போட்டியில் இறங்கியது. இது தமிழ்த் தேசியக கூட்டமைப்பு பிளவுபடக் காரணமாகியது.

• முல்லைத் தீவில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்திய தமிழரசுக் கட்சியினர் முல்லைத் தீவில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டியிடுகின்றனர். தமிழரசுக் கட்சியின் இத்தகையைப் போக்கு எதிர் காலத்தில் அதன் இருப்புக்கே ஆபத்தாக முடியும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியத்தை சிதைக்கக் கூடாது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா அதற்கு ஒற்றுமை அவசியம் என்று குறிப்பிட்டார்.

• ஒற்றுமை வராது


இன்றைய நிலையில் ஒற்றுமை என்பது வராது என்று குறிப்பிட்ட அவர் தலைமைகள்தான் கூடியுள்ளன. தமிழ்த் தேசியத் தேய்ந்து விட்டது என்றும் அந்த நேர் காணலில் சுட்டிக் காட்டினார். திருகோண மலையில் வேலை வாய்ப்பு வசதிகள் தமக்குக் கிடைப்பதில்லை என்று மக்கள் குறிப்பிட்ட போது சம்பந்தன் எம்.பி. அவர்கள் அரசியலில சலுகைகள் வேலை வாய்ப்பெல்லாம் கொடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.



(தொடர்ச்சி 19 பக்கம்)

# மே பதினெட்டும் கனடாவும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**மே** 18ஐயொட்டி கனேடிய பிரதமர் வெளியிட்ட அறிக்கை தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றது. அதேசமயம் இலங்கை அரசாங்கம் அதை ஒரு சவாலாகப் பார்க்கின்றது. தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அதிக தொகை மக்கள் செறிவாக வாழ்வது கனடாவில்தான். இது தொடர்பிலும் சரியான புள்ளிவிவரங்கள் கிடையாது. 5 லட்சத்திற்கும் அதிகமான தொகையினர் என்று உத்தியோகப் பற்றற்ற புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேருக்குத்தான் உத்தியோகபூர்வமாக பதிவு உண்டு என்று கூறப்படுகிறது.

தமிழ்மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒப்பீட்டளவில் ராஜதந்திர செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாக எழுச்சி பெற்றிருப்பது கனடாவில்தான். அதன் விளைவாகத்தான் கனடா இரண்டு மூத்த ராஜபக்ஷைகளும் உட்பட நான்கு பேர்களை நாட்டுக்குள் வரவும் முதலீடு செய்யவும் தடை செய்திருக்கிறது. அதே சமயம் ஒன்றாரியோ சட்டமன்றத்திலும் ஒட்டோவா நாடாளுமன்றத்திலும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை யாவும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் பெற்ற வெற்றிகள். தனிப்பட்ட நபர்கள் தனிப்பட்ட கனேடிய அரசியல்வாதிகளை நோக்கி உழைத்து திட்டமிட்டு பெற்ற வெற்றிகள்.

தொகையாக காணப்படும் புலம்பெயர்ந்த தமிழர்கள் அங்கே ஒரு வாக்கு வங்கி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் அந்த வாக்கு வங்கியை பாதுகாப்பதற்காக கனடா தன்னுடைய வெளியுறவுக் கொள்கையில் ஈழத் தமிழர்களுக்கு சாதகமான சில முடிவுகளை எடுக்க வேண்டி வந்தமை என்பது அங்குள்ள தனிப்பட்ட சில செயற்பாட்டாளர்களின் அயராத உழைப்பினால் தான்.கனடாவின் இரண்டு தீர்மானங்களும் அந்தந்த மன்றங்களில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டவை. அப்படி பார்த்தால் அவை அந்த மன்றங்களின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகள்தான். எனினும் அந்த நிலைப்பாடுகளின் காரணமாக கனடாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவை முறித்துக் கொள்ளும் ஒரு வளர்ச்சி இன்னமும் ஏற்படவில்லை. ஈழத் தமிழர்கள் அந்த இலக்கை நோக்கித்தான் இனி உழைக்க வேண்டியுள்ளது.

கடந்த மே 18இன் போது கனேடியப் பிரதமர் தனது ருவிற்றரில் பதிவிட்ட செய்தி குறிப்பை பெரும்பாலான தமிழர்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால் கனேடிய பிரதமரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவை எத்தனை புலம்பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் மீண்டும் பகிர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தால் மிகக் குறைந்த தொகையை காணப்படுகிறது என்று ஒரு கனேடிய அரசியல் செயற்பாட்டாளர் சொன்னார். அதாவது நாட்டின் பிரதமர் தமிழ் மக்களுக்கு சாதகமாக வெளியிட்ட ஒரு குறிப்பை கனடாவில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களும் உட்பட ஈழத்தமிழர்களில் எத்தனை பேர் மீண்டும் மீண்டும் பகிர்ந்திருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையை பார்க்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். கனேடியப் பிரதமரின் கூற்றை தமிழ் இணையதளங்களிலும் தமிழ் செய்தி அறைகளிலும் திரும்பத் திரும்பக் கூறி சந்தோஷப்படுவதனால் தமிழ் மக்களுக்கு உற்சாகம் ஏற்படலாம்.ஏனைய புலம்பெயர்ந்து வாழும் சமூகங்களுக்கு அது தூண்டலாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கனேடிய அரசியல் சமூகத்தில் பிரதமரின் கூற்றை தமிழ் மக்கள் எந்தளவுக்கு கொண்டாடுகிறார்கள் என்பதனை அவருடைய உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் தமிழ் மக்கள் எண்பிக்க வேண்டும். அவருடைய ருவிற்றர் பதிவை எத்தனை லட்சம் பேர் திரும்பத் திரும்ப பகிர்கிறார்கள் என்பது அவருக்கு உற்சாகமூட்டும்.

அப்படித்தான் பிரித்தானியாவில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து வேட்டை போராட்டத்திற்கும் ஆதரவு இரண்டாயிரத்தைத் தாண்டவில்லை. இலங்கை தீவில் நடந்தது இனப்படுகொலை என்பதனை உலகின் பெரிய நாடுகள் உத்தியோபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. கனடாவும் அதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றது. ஐநா போன்ற உலகப்பொது மன்றங்களும் அதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறான ஒரு பின்னணியில் நடந்தது இனப்படுகொலை என்பதனை அழுத்தமாக உலகசமூகம் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைமை வந்தால்தான் தமிழ்மக்கள் இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை பெறுவது சாத்தியமாகும். இல்லையென்றால் வெளிநாடுகள் அங்கே புலம்பெயர்ந்து வாழும் தமிழ் வாக்காளர்களை குறி வைத்து தமிழ் வாக்காளர்களை கவரும் நோக்கத்தோடு சில நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடும். அந்த நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு சாதகமானவைதான். ஆனால் அவற்றை முழு நிறைவான ராஜதந்திர விளைவுகளாக மாற்றுவது தமிழ்மக்களின் கடும் உழைப்பில்தான் தங்கி இருக்கின்றது.

யாரும் தமிழ் மக்கள் மீது இரக்கப்பட்டு அல்லது நீதியின் அடிப்படையில் உதவப் போவதில்லை. நலன்களின் அடிப்படையில்தான் உதவுவார்கள். உலகில் எந்த ஒரு வெளியரசும் ஈழத்தமிழர்களுக்கு நீதியின் பாற்பாட்டோ அல்லது நியாயத்தின் பாற்பட்டோ அல்லது அன்பு இரக்கம் என்பவற்றின் அடிப்படையிலோ உதவ முன்வராது. ராஜதந்திர உறவுகளை அவ்வாறு அப்பாவித்தனமாக விளங்கிக் வைத்திருந்தால் ஈழத்தமிழர்கள் அடுத்த கட்டத்திற்கு முன்நகர முடியாது. ராஜதந்திர உறவுகள் எனப்படுகின்றவை முழுக்க முழுக்க நலன்சார் உறவுகளே. நலன்சார் பேரமே்நலன்சார் வியாபாரமே்நலன்சார் கொடுக்கல் வாங்கல்தான். இந்த விடயத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் வாக்குப் பலம் மிக்க ஒரு சமூகமாக எழுச்சி பெறுவதனால் ஆங்காங்கே தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களின் மீது செல்வாக்கை பிரயோகிக்கும் ஒரு வளர்ச்சியை நோக்கி படிப்படியாக போய்க்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த முயற்சிகள் அநேகமானவை தனிப்பட்ட முயற்சிகள்தான். அல்லது சிறிய குழுவினரின் முயற்சிகள்தான். ஒரு பலமான மையத்திலிருந்து நிறுவனமயப்படுத்தப்பட்ட முயற்சிகள் அல்ல. இந்த நகர்வுகளில் இருக்கும் அடிப்படை பலவீனம் அதுதான். சில தனிநபர்களின் அல்லது சிறு அணியினரின் கடும் உழைப்பு அடுத்தடுத்த கட்டத்துக்கு நிறுவனமயப்படுத் தப்படவில்லை என்றால் வீணாகிப் போய்விடும். புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் அந்தந்த நாடுகளின் முடிவெடுக்கும் அதிகாரத்தை பெற்ற கொள்கை வகுப்பாளர்களை கையாள்வதற்கு பதிலாக அந்தந்த நாடுகளின் அரசியல் கட்சிகள் தமிழ் வாக்காளர்களை கையாண்டு விட்டுப் போய்விடும். தமிழகத்திலும் இது தான் நடந்தது. இப்பொழுதும் நடக்கின்றது.

அரசற்ற சிறிய மக்கள் கூட்டம் ஒன்று அரசுகளோடு உறவுகளை வைக்கும் பொழுதும், அரசுகளைக் கையாளும் பொழுதும், அடிப்படையான கட்டமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அக்கட்டமைப்புகளுக்கு இடையே ஆகக்கூடிய ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். அப்படி ஒரு கட்டமைப்பாக செயல்பட்டால்தான் தமிழ்மக்கள் ராஜதந்திரரீதியாக உலகநாடுகளின் தலைநகரங்களில் கொள்கை வகுப்பாளர்களின் மீது செல்வாக்கை பிரயோகிக்கும் ஒரு வளர்ச்சியைப் பெறலாம்.

இல்லையென்றால் தமிழ்மக்கள் வெளியரசுகளை கையாள்வதற்கு பதிலாக வெளியரசுகள் தமிழ்மக்களைக் கையாண்டு விட்டுப் போய்விடும். கடந்த மே 18ஐயொட்டி கனேடியப் பிரதமர் வெளியிட்ட ருவிற்றர் பதிவில் அவர் இனப்படுகொலை என்ற வார்த்தையை தன் கூற்றாகக் கூறவில்லை. மாறாக, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை அவர் அங்கு சுட்டிக்காட்டுகிறார். எனினும் அந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதனால் அதற்கு ஒரு மக்கள் ஆணை உண்டு. மேலும் தன்னுடைய அந்த ருவிற்றர் குறிப்பில் கனேடியப் பிரதமர் மற்றொரு விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றார். ஜெனிவாவில் ஏனைய அனைத்துலகப் பங்காளிகளோடு இணைந்து கனடா செயற்படுகிறது என்பதே அது. அதற்குள்ளும் ஒரு செய்தி இருக்கிறது.

ஜெனிவாவில் தமிழ்மக்களின் விவகாரம்மனித உரிமைகள்பேரவைக்குட்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் பேரவைக்குள்ள மக்கள் ஆணை பலவீனமானது. அது ஒரு நாட்டின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கவும் அல்லது தடைகளை விதிக்கவும் முடியாது. ஒரு நாட்டின் அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அந்த அரசாங்கத்தோடு இணைந்து மனித உரிமைகள் பேரவை செயற்படும். ஆனால் ஐநா பாதுகாப்புச் சபை, பொதுச் சபை போன்றன அப்படியல்ல. அவற்றுக்கு சக்தி அதிகம். எனவே தமிழ் மக்களின் விவகாரத்தை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பது தமிழ் மக்களின் ஒரு முக்கிய கோரிக்கையாக காணப்படுகின்றது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்று தமிழ்க் கட்சிகள் இணைந்து அக்கோரிக்கையை ஐநாவிடம் முன் வைத்தன. ஆனால் தமிழ்மக்களின் விவகாரம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு செல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல,ஒரு ஐநா தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் கூட ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்துக்கு உட்பட்டதாகத்தான் இயங்கி வருகிறது. அதாவது தமிழ் மக்களின் விவகாரத்தை மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டிகட்ட வேண்டும் என்று ஐநா ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்து வைத்திருக்கிறது. அந்த அரசியல் தீர்மானமானது இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம் ஆகும்.

ஈழத் தமிழர்களுக்காக இலங்கை அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்வதற்கு உலகில் பெரும்பாலான நாடுகள் தயாரில்லை. ஏனென்றால் இலங்கைத்தீவு அமைந்திருப்பது கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு சந்தியில். எல்லாப் பேரரசுகளுக்கும் அது தேவை. அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழ் வாக்குகள் சில நாடுகளுக்குத் தேவை. சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறியிருக்கும் இச்சிறிய தீவில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு தமிழர்களை ஒரு கருவியாகக் கையாள வேண்டிய தேவை எல்லாப் பேரரசுகளுக்கும் உண்டு. தேவைகளுக்கிடையிலான பேரந்தான் ராஜதந்திரம். எனவே தமிழ் மக்கள் தங்களைக் கையாள முற்படும் பேரசுகளைத் தாங்கள் எப்படிக் கையாள்வது என்று சிந்திக்க வேண்டும்.

## வீணாவின் கவிக்கணை

ஓஹோ என்று இல்லாவிடிலும்,
ஓரளவாவது இருந்து விட்டால்
போதும் நம் வாழ்க்கை,
பசிக்கு உணவு,
மானத்தை காக்க உடை,
நோயற்ற வாழ்க்கை, நம்மை
புரிந்துகொள்ளும் துணை,
அன்பான குழந்தைகள்,
இருந்தாலே நம் வாழ்க்கை
சொர்க்கமே,
இதைவிட அதிகமாக
தேடும் முயற்சியில்
நரகத்தில் காலடி வைத்து விடாதே.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## "கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக

# துர்க்கேஸ்வரத்தில்

# 18-6-2023 ஞாயிறு

## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி ஐந்து தள ராஜகோபுரத்துடன்



றொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'ேகங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

## துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய

## தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




## யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

# யூன் 7ம் திகதி

## மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

# கனடாவில் நிகழும்

## மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# மஹாகும்பாபிஷேகம்

## காலை 6.00 மணி முதல்

## அம்பாள் தேவஸ்தானம்

## புதிதாய் புனர்நிர்மாணம்

## மஹாகும்பாபிஷேக யாகபூஜை

### யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்தூபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
**மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்**

### மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

## மாபெரும் வழிபாடு

## துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு

### யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.



உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2023

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினைந்தாவது முறையாக நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் இருபத்தேழாம் நாள் (ஆங்கிலம்10-05-2023 புதன்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 19ம் நாள் ஆங்கிலம் 02-06-2023 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 03-06-2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்

**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ நீலகண்டன் அஹோரசாமி
(தமிழ்நாடு, இந்தியா)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

09-05-2023 செவ்வாய் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 10-05-2023 | புதன் | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 11-05-2023 | வியாழன் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 12-05-2023 | வெள்ளி | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 13-05-2023 | சனி | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 14-05-2023 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. கதிர்காமநாதன் குடும்பம் திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 15-05-2023 | திங்கள் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 16-05-2023 | செவ்வாய் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. பகீரதன் துஷ்யந்தா குடும்பம் லக்சி சுப்பர் மார்க்கட் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 17-05-2023 | புதன் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 18-05-2023 | வியாழன் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 19-05-2023 | வெள்ளி | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 20-05-2023 | சனி | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 21-05-2023 | ஞாயிறு | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 22-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 23-05-2023 | செவ்வாய் | திரு பத்மநாதன் குடும்பம் பிரம்ரன் - கனடா | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 24-05-2023 | புதன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் காங்கேசன் துறை | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 25-05-2023 | வியாழன் | திரு. தவராசா சிவசோதி குடும்பம் -அனலைதீவு | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 26-05-2023 | வெள்ளி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 27-05-2023 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | நர்த்தன வடிவம் |
| 19 | 28-05-2023 | ஞாயிறு | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 29-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 30-05-2023 | செவ்வாய் | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 31-05-2023 | புதன் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 01-06-2023 | வியாழன் | திரு.சுப்பையா கிருஷ்ணபகவான் குடும்பம் -கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 02-06-2023 | வெள்ளி | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 03-06-2023 | சனி | தீர்த்தத் திருவிழா - ஓர் அன்பர் | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 04-06-2023 | ஞாயிறு | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 09-06-2023 | வெள்ளி | சிவகுமார் குடும்பம் - இராஜேஸ்வரன் குடும்பம் A1 Florist - Brampton | | மாலை: வைரவர் மடை |
| 28 | 10-06-2023 | சனி | திருவருள் கனகசபை குடும்பம் - அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழ்ச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
குருமூர்த்தி ரெங்கநாதன் - சிவவடிவேல் முனுசாமி
செந்தில்நாதன் ஆனந்தன் - பழனிவேல் நாகராஜன்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - தேவேந்திரன் - ரெங்கராஜன்
மணிகண்டன் மாரிமுத்து - முனிராஜ் முனிரத்தினம்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA




*(13 பக்கத் தொடர்ச்சி)*

## 'சிங்களச் சிந்தனையுடன்' தமிழர்களை ஆள நினைக்கும் தமிழ் தலைமைகள்!

ஆனால் வடபகுதியில் தமக்குத் தெவையானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா ஒரேக் கட்சியில் இரு வேறுபட்ட நிலைப்பாடு இருப்பது கட்சிப் பாதிக்கும் என்றும் தெரிவித்தார்.

மொத்தத்தில் தமிழ் மக்களுக்கென இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இல்லை. தனி வழி போன தமிழரசுக் கட்சியும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது. தலைமைத்துவ போட்டிக்குள் தமிழரசுக் கட்சி சிக்கியுள்ளது என்பதையும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தனது நேர் காணலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

• மீள முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை மூழ்கிக் கிடக்கின்றது.
• நாடடில் அரசியல் ஸ்திரமின்மை ஆழ வேரூன்றியுள்ளது.
• தென்னிலங்கை அரசியலில் அரகலய தோற்றுவித்துள்ள மாற்றத்துக்கான கருத்தியல் உருவாக்கியுள்ள அதிர்வலைகள் பலமாக எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.
• ஆட்சி அதிகாரத்துக்காக பிரிந்து நின்று பல சக்திகள் தென்னிலங்கை அரசியல் களத்தில் ஒற்றுமை இன்றி போராடிக் கொண்டிருக்கின்றனர்.
• ஆட்சி அதிகாரத்திற்காக பரிந்து நின்று போராடும் இந்த சக்திகள் ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கு சவால் விடுத்து வருகின்றனர்
• தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ரணில் - ராஜபக்ஷ அணியினர் கட்டவிழ்த்துள்ள ஜனநாயக விரோதப் போக்கு தலை விரித்து ஆடுகின்றது.
• ரணில் - ராஜபக்ச அணிக்குள் முளைவிட்டுள்ள அதிகாரப் போட்டிக்குள் யாரை? யார்? விழுங்குவது என்ற பனிப் போர் உக்கிரமடைந்து வருகின்றது.

இவ்வாறு குழம்பிக் கிடக்கும் தென்னிலங்கையில் தமிழர்களை துவம்சம் செய்வதும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கையைக் கொண்டுவரும் கொள்கை கோட்பாடு வேலைத் திட்டம் என்பன எவ்விதத் தடைகளும் இன்றி நிறைவேறிக் கொண்டிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக உள்ளது.

• குழம்பிய குட்டைக்குள் மீன் பிடியுங்கள்

இவ்வாறு தென்னிலங்கையே குழம்பிக் கிடக்கின்றது. இந்தக் குழம்பிய குட்டைக்குள் மீன் பிடியுங்கள் என அரசியல் விமர்சகர்கள் தமிழ்த் தலைமைகளுக்கு உரத்துக் கூறி வருகின்றனர். ஆனால் தமிழ்த் தலைமைகள் தாமும் குழம்பி தமிழ் மக்களையும் குழப்பி தமிழ் மக்களுக்கு எதிரான "சிங்களச் சிந்தனைக்குள்" மூழ்கிக் கிடக்கின்றனர்.

தமிழ் மக்களை விடுதலை நோக்கி அழைத்துச் செல்லும் எவ்வித வேலைத் திட்டமும் தமிழ்த் தலைமைகளிடம் இல்லை. ஆனால் ஒப்புக்காக உள்ளக சுய நிர்ணயம், சமஷடி என்று பேசுகின்றனர். இவை அனைத்தும் ஒற்றையாட்சிக்குள் சாத்தியமா?

மறுபுறம் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஐ வேண்டாம் என்று கூறுகின்றனர். புதிய அரசியலமப்பு யாப்பின் மூலம் உள்ளக சுய நிர்ணயத்தையும் சமஸ்டியையும் கொண்டு வர முடியுமா?

• போர் முற்றுப் பெற்று 14 வருடங்கள் கழிந்து விட்டன. தமிழ் மக்களின் குருதியால் முள்ளி வாய்க்காலும் நந்திக் கடலும் மூழ்கிய சுவடுகள் இன்றும் மாறவில்லை.
• கொட்டிய குருதியின் ஈரமும் காயவில்லை அப்படியே இருக்கின்றது.

ஆனால் தமிழ்த் தலைமைகள் நெஞ்சில் ஈரமின்றி "சிங்கள சிந்தனைகளைக்" காவிக் கொண்டு "தமிழ் மக்களின் ஆணையை" மறந்து நாடாளுமன்ற மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான நாற்காலிகளை இலக்கு வைத்துப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய இந்த தமிழ்த் தலைமைகளை நம்பிப் பயணிப்பதில் பலனில்லை என்பது வெட்ட வெளிச்சமாக உள்ளது.

தமிழ் மக்கள் மாலுமி இல்லாத கப்பலில் இன்னும் எவ்வளவு காலத்திற்குப் பயணிக்கப் போகின்றனர் ஏன்பதுதான் இன்று உள்ள கேள்வியாகும்.

Email : vathevaraj@gmail.com
19th May 2023



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 16)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

## தமிழ்ச் சமூகம் மீண்டும் அறிவுசார் சமூகமாக மாற வேண்டும்



**கண்ணுடையர் என்பார் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்**
**(அதிகாரம்: கல்வி குறள் 393)**

உயர்தரப்பரீட்சை மதிப்பீட்டுப்பணியில் ஈடுபட்டுள்ள ஒரு இஸ்லாமிய நண்பருடன் அவர்களின் இன்றைய கல்வி நிலை பற்றிப் பேசினேன். 1970களின் இறுதியில் ஆரம்பித்த இலங்கை முஸ்லிம்களின் நவீன கல்விப்பாய்ச்சல் இன்று எவ்வாறு மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பதை அவர் விளக்கினார். வியாபாரிகளின் சமூகமாக பெரும்பாலும் அடையாளப்படுத்தப்பட்ட அச்சமூகம் இன்று அதிகளவு கல்விமான்கள் வைத்தியர்கள் பொறியாளர்கள் கணக்கியலாளர்கள் முகாமையாளர்கள் கணிணி வல்லுநர்கள் நிருவாக அதிகாரிகள் சட்டத்தரணிகள் என்று பொருளாதார ரீதியில் வலுவானதொரு கற்றோர் சமூகமாக மாறியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் இந்த மாற்றம் இடம் பெற்றாலும் அதன் ஆரம்பப் புள்ளியாக 1977இல் பொருளாதாரம் திறந்து விடப்பட்டமையால் மத்தியகிழக்கில் உள்ள இஸ்லாமிய நாடுகளில் உருவாகிய தொழில்வாய்ப்புகள் காரணமாக ஏற்பட்ட குடிப்பெயர்வும் அதன் மூலம் உள்வந்த பணம் காரணமாக அவர்களின் பொருளாதார நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. அதேவேளை அச்சமூகத்தில் இருந்த தனவந்தார்கள் சிலர் தமது சொந்தப்பணத்தில் வசதியில்லாத ஆனால் படிப்பில் ஆர்வம் காட்டும் சிறுவர்களுக்கு உணவு உடை இருப்பிடம் மற்றும் பாதுகாப்பினை வழங்கி தமது சமயம் சார்ந்த கல்விச் சுழலில் மதக் கற்கைகளோடு இலங்கையின் பிரதான பரீட்சைகளுக்கும் அவர்களைத் தயார்படுத்தும் நோக்கில் கல்விச்சாலைகளை அமைத்தனர். இதன் ஒரு முன்னோடியாக பேருவளையின் நளீம் ஹாஜியாரையும் அவர் தாபித்த ஜாமியா நளீமிய்யா என்ற கல்வித்தாபனத்தையும் குறிப்பிடலாம்.



நான்கு தசாப்பதங்களுக்கு முன்பு முஸ்லிம் செல்வந்த வர்த்தகரான ஒருவர் யாருமே சிந்தித்திராத ஒரு வேளையில் தனது சமூகம் பற்றிய அக்கறையோடு இலவசமாக கல்வி வழங்கும் ஒரு தாபனத்தை உருவாக்கி அதன் ஊடாக இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து வசதி குறைந்த முஸ்லிம் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியை வழங்கி மிகப்பெரிய ஒரு மாற்றத்தைச் செய்திருக்கிறார். அதில் கல்வி கற்றோர் இலங்கை நிர்வாக சேவை உட்பட அரச சேவைகளிலும் தனியார் துறையிலும் நல்ல பதவிகளில் உள்ளனர்.

வெளிப்பார்வைக்கு ஒரு மதக்கல்வி நிறுவனமாகத் தோற்றமளித்தாலும் இலங்கையின் அரசதுறை மற்றும் தனியார் துறை தொழில்வாய்ப்புகளில் போட்டியிட்டு வெற்றிபெறும் அளவுக்கு அந்நிறுவனம் கல்வியாளர்களையும் நிபுணர்களையும் உருவாக்கி விட்டிருக்கிறது. கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் அரசியல்வாதி மத்திய கிழக்கு நாடொன்றின் நிதி அனுசரணையில் உருவாக்கிய பிரமாண்டமான பல்கலைக்கழகக் கட்டடம் இந்த முயற்சியின் ஒரு நீட்சியாகவே பார்க்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தமது சமூகத்தின் நன்மைகருதி தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை சரியானவகையில் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவதையும் காணமுடிகிறது.

கிழக்கிலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தவர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருமளவில் குடியேறியுள்ளதையும் காணமுடிகிறது. கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளுக்காகவே இத்தகைய குடிப்பெயர்வுகள் இடம் பெறுகின்றன. ஆரம்பத்தில் தனிப்பட்ட சிலர் மேற்கொண்ட தூரநோக்குடனான கல்வித்துறை முதலீடுகள் மற்றும் அச்சமூகத்தின் அரசியல்வாதிகள் வழங்கிய தொழில் வாய்ப்புகள் ஆகியன இத்தகைய முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

அதேவேளை, ஆங்கிலேயர் காலத்திலேயே கற்றோர் நிறைந்த ஒரு சமூகமாக மற்றவர்கள் பொறாமைப்படும் உன்னத நிலையில் இருந்த இலங்கையின் தமிழ்ச் சமூகம் தனது கண்களை இழந்து வெறும் புண்களைச் சுமந்த சமூகமாக அலைந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் இருந்தே உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமூகமாக இருந்த மலையக தமிழ்ச்சமூகம் கல்வித்துறையில் சில முன்னேற்றங்களைக் கண்டுள்ள போதிலும் அதன் நிலையை முஸ்லிம் சமூகத்தின் கல்விப்பாய்ச்சலுடன் ஒரு போதும் ஒப்பிட முடியாது. ஒரு காலத்தில் "கோழி மேய்ச்சாலும் கோன்மேந்திலை கோழி மேய்க்கோனும்" என்று அரச தொழில் துறை வேலைவாய்ப்புகளைப் பெறுவதையே கல்வியின் முழு நோக்கமாகக் கொண்டிருந்தது இலங்கைத் தமிழ்ச்சமூகம்.



அன்றெல்லாம் அரச உத்தியோகம் இல்லாவிட்டால் மாப்பிள்ளைக்கு யாரும் பெண் தரமாட்டார்கள். "உத்தியோகம் புருஷ லட்சணம்" என்றொரு பழமொழியுண்டு. ஆனால் அது அரச உத்தியோகமாக இருக்கவேண்டுமென்று வடபுல தமிழ்ச்சமூகம் எதிர்பார்த்தது. எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இலங்கையில் வெளிவந்த தமிழ் நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் போன்றவற்றின் பிரதான கதையம்சங்களில் இந்த அம்சம் மறுக்க முடியாத ஒன்றாக இருந்தது. ஒரு ஏழை விவசாயக் குடும்பம். அம்மா, அப்பா, அண்ணன், தங்கை. அண்ணன் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருப்பார். பெரும்பாலும் ஊரில் உள்ள ஒரு பெட்டைக்கு படலைக்குள்ளால் களவாக கதையும் காதல் கடிதமும் பரிமாறிக்கொண்டிருப்பார். பல்கலைக்கழகம் போவார். பட்டம் பெறுவார். அரசாங்கத் தொழில் கிடைக்கும். தங்கச்சிக்கு பொறுப்பான அண்ணையாக கலியாணம் முடித்து வைப்பார். பிறகு உச்சகட்டப்பிரச்சினைகள் ஏதாவது ஏற்பட்டு அதை வெற்றிகொண்டு தன்னுடைய கலியாணத்தையும் முடிப்பார் சுபம் வரும்.

ஆக, அரசாங்கத் தொழிலில் தங்கியிருப்பது தான் வாழக்கையை வெற்றிகொள்ள ஒரே வழி கற்றலின் நோக்கமும் அதுவே என்பது சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், பின்வந்த காலங்களில் நாட்டில் சிங்கள மொழிக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை மற்றும் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் அரசாங்கத் தொழில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகளால் தமிழ்ச்சமூகத்தின் தொழில்வாய்ப்புகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது என்பதில் நமக்கு மாற்றுக்கருத்துகள் இல்லை. இப்போது காணப்படுவது போல் தனியார் பல்கலைக்கழகங்களோ தொழில் வாண்மைக் கற்கைகளைத் தரும் நிறுவனங்களோ இலங்கையில் இருக்கவில்லை. தனியார்துறைத் தொழில்வாய்ப்புகளும் பெரிதாக இருக்கவில்லை. எனவே முற்றும் முழுதாக அரச நிறுவனங்களிலேயே தங்கியிருக்க நேர்ந்தது.

பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் இதற்கெதிரான போராட்டங்களை சாத்வீக முறையில் ஆரம்பித்த காலப்பகுதியிலேயே தூரநோக்குடைய கல்விமான்கள் மேற்குலக நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். ஆனால் கல்விச் செயற்பாடுகளில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படவில்லை. காலை நான்கு மணிக்கு யாழ்ப்பாணத்தில் தொடங்கும் டியுசன் சென்டர்கள் இரவு வேளைகளிலும் இயங்கின. பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு அவதானித்தனர். சிறந்த பெறுபேறே அவர்களின் நோக்கமாக இருந்தது. பல்கலைக்கழகங்களில் நுண்மான்நுழைபுலமும் நுண்மதியும் கொண்டவர்கள் இருந்தனர். அவர்களது ஆங்கிலப்புலமை அற்புதமானது. அவர்கள் இப்போது போல ஒரு புள்ளித்திட்டத்திற்கு அமைய கடதாசித்தகைமைகளைப் பெற்று பேராசிரியரானவர்கள் அல்லர். அவர்களிடையே வித்துவக்காய்ச்சல் இருந்தாலும் அது குழாயடிச் சண்டையாக மாறியதில்லை. அவர்களைப் பார்த்தாலே அவர்களின் தோற்றம் பேச்சு நடத்தை பழகும் விதம் என்பன அவர்களைப் பேராசிரியர்களாகக் காட்டும். அவர்களின் அறிவின் ஆழம் அவர்களது மாணவர்களில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும். அத்தகைய பேராசிரியர்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களுள் நானும் ஒருவன்.

மறுபுறம் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளில் ஆசிரியத் தொழிலுக்கு வருவோர் கட்டாயமாக கஷ்டப்பிரதேசங்களில் சிலகாலம் பணிபுரிய வேண்டியிருந்தது. அவ்வாறு அக்காலப்பகுதியில் கட்டாயத்தின் பிரகாரம் இலங்கைபூராகவும் நியமிக்கப்பட்ட யாழ்ப்பாணத்து ஆசிரியர்களே அந்தந்த கஷ்டப் பிரதேசங்களில் இருந்த மாணவர்களின் கல்விக்கண்களைத் திறந்துவிட்ட புண்ணியவான்கள். கவனிக்கவும் நாம் இங்கு குறிப்பிடுவது தொலைக்காட்சி, செல்லிடத்தொலைபேசி, கணிணி, இணையம் போன்ற இவை எதுவுமே இல்லாமல் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஒரு காலப்பகுதியை. வானொலி, பத்திரிகை, சினிமா போன்றவை மட்டுமே தொடர்புச் சாதனங்களாக இருந்தன. ஆகவே ஆசிரியர் சொல்வதே மாணவனுக்கு வேதவாக்காக இருந்தது.

அப்படி வந்தவர்களில் ஒருவரை எனக்கு நன்கு பழக்கம். நல்ல வெள்ளை. நல்ல உயரம். சண்டியன் போலப்பேச்சு. ஒரு செல்வந்த வர்த்தகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பேராதனைப்பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரி. யாருக்கும் பயப்படமாட்டார். விட்டுக்கொடுக்கவும் மாட்டார். ஒரு தடவை மாற்று மதத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் மோசமாகப் பேசிவிட்டார் என்பதற்காக அவரது கழுத்தைப் பிடித்து தூக்கிச் சுவற்றிலே சாத்திவிட்டார். ஆனால் படிப்பிப்பதிலே மன்னன். எங்களுக்கு அவர் சூப்பர் ஹீரோவாகத்தான் தெரிந்தார். இப்போது கனடாவில் அமோகமாக வாழ்கிறார். தனது ஊர் பாடசாலைக்கு நிதிஉதவிகள் செய்வதாக முகப்புத்தகத்தில் சமீபத்தில் பதிவொன்றைக்கண்டேன். அன்றைய காலத்திலேயே தனது சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கி "படியுங்களடா" என்று ஊக்குவித்தவர் இப்போதும் அதைத் தொடர்ந்து செய்வது மகிழ்வு தந்தது.

யுத்தம் தொடங்கிய பின்னர் வடபுலத்தில் எல்லாச் செயற்பாடுகளும் முடங்கிப்போனாலும் கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்றதாக தென்பகுதியில் உள்ளவர்கள் கருதுகின்றனர்.



(தொடர்ச்சி 22 பக்கம்)

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

As a nation our forefathers have failed to record our past history in a methodical way. History of Tamils have to be reconstructed based on stone inscriptions, copper plates, ola leaves etc. "Mangulam inscription" is often regarded as one of the oldest Tamil Brahmi inscriptions, 3rd century BCE, found in Madurai district. Tamil copper-plate inscriptions are records of grants of villages, plots of cultivable lands or other privileges to private individuals or public institutions by the members of the various South Indian royal dynasties. A typical Chola copperplate inscription currently displayed at the Government Museum, Chennai, India, is dated 10th century C.E. It consists of five copper plates stringed in a copper ring, the ends of which are secured with a Chola seal bearing in relief, a seated tiger facing the right, two fish to the right of this, the study of these inscriptions has been especially important in reconstructing the history of Tamil Nadu. Tamil palm-leaf manuscript of Tholkappiyam and Sankam poems have survived, but some important works have been lost to the elements.

In contrast, Greeks, Romans and Egyptians have kept historical records from earlier times. The Egyptian hieroglyphs date to between 3400 – 3200 BCE and are the oldest recorded history discovered so far in the world. The hieroglyphs



were found in Tomb U-j, which is believed to hold the remains of Scorpion I, one of the first rulers of Ancient Egypt.

The ancient records like the Mahavamsa are full of myths, fantasies, superstitions beliefs and legends, but it also covers the history of royal dynasties that ruled Ceylon beginning with the arrival of legendary Vijaya in 543 BC. Therefore, while reading Mahavamsa, one should separate facts from fiction. Mahavamsa was compiled mainly for the serene joy and emotion of the (Buddhist) pious. It identifies the original inhabitants of Lanka as Nagas, Devar, Vedas, Yakshas and Rakshas. Of course, there is no mention about Sinhalese. It was Buddhist Nagas in due course who metamorphosed into Sinhalese around the 7th century. Likewise, Vedic Nagas were assimilated into Tamil language and culture. With all its shortcomings, there is no chronical like Mahavamsa in South Asia, including India. As stated above, Mahavamsa narrates the 'history' from the arrival of Vijaya in 543 BC to Mahasenan (463 – 479AD) the 64th king.

Only from Mahavamsa we learn that Tamil settlements existed to the north of Mahaweli Ganga. It says when Viharamahadevi asked Duttu Gemunu (161 BC-137 BC) why he is sleeping curled up in a large bed and why not stretch out and sleep comfortably, he answered thus: "On one side there is the dumb ocean and on the other side beyond the Maha Ganga River there are Damilas. How can I stretch out and sleep comfortably?".

When Duttu Gemunu marched his army to fight King Ellalan who ruled from Anuradhapura he has to fight and defeat 32 Tamil chieftains before he reached Anuradhapura. He also killed around sixty thousand Tamils in the war. How could there be 32 Tamil chieftains in the area of Anuradhapura alone, if there were no Tamils or Tamil settlements?

In 237 BC two Saivite Tamils, Senan and Kuttakan from Tamil Nadu defeated Tissa in battle and ruled Anuradhapura for 22 years. Anuradhapura was under 8 Saivite Tamil rule for the next 134 years ending in 103 BC for a total of 82 years.

The language spoken by the Nagas was different from that spoken by other Tamils. This is illustrated by the story of Sathuvan in the Buddhist epic Manimeghalai. But both Nagas and Tamils were followers of Vedic religion. Following the Vedic religion of Sri Lanka, the Nagas eventually became Tamils. Similarly, Buddhist Nagas became Sinhalese.

Kodeeswaran made legal history when he filed petition challenging the withholding of his increment for failure to pass exams in Sinhalese within the period stipulated by the government. The Colombo District Court Judge ruled in his favour, but the government on appeal to the Supreme Court succeeded in overturning the judgment of the lower court. Below is the judgment of the Supreme Court continued from last week which will be of interest to students of history and law. So far, we have failed to document the entire case in print.

H. N. G. Fernando, C.J.

I must note here that the Minute clearly states that the salary scales, cadre, and conditions of service are liable to alteration from time to time. On 4th December 1961 a new Treasury Circular Xo. 560 provided that Officers of the category to which the plaintiff belonged must pass a proficiency' test in Sinhala. According to this Circular a Tamil officer (as the plaintiff is) is required to pass a test in Sinhala at 3rd standard level within one year from 1st January 1961, a test at 5th standard level within two years, and at J. S. C. standard within three years. The Circular provided for suspension of an increment falling



due after February 17, 1962 in a case of an officer failing the test. The plaintiff did not present himself for the requisite examination, and the suspension of his increment which fell due on April 1, 1962 was ordered in pursuance of the Circular on the ground that he had not passed the first of the language tests prescribed in the Circular

One of the grounds on which the plaintiff's action was resisted by the Attorney-General is that a public servant in Ceylon has no right to sue the Crown for the recovery of wages claimed to be due for service under the Crown. This defense, which was rejected by the learned trial Judge, raises questions of great importance and difficulty, and the Court is much indebted to Counsel for the full and able arguments presented at the hearing of this appeal.

The first question to be decided is whether the relationship between the Crown and its servants in Ceylon is regulated by the Roman-Dutch Law, or else by the English Law as altered or modified in its application in this country'. The contention that the Roman Dutch Law applies supported by two early decisions of this Court which are reported in Ramanathan's Reports 1863-68. *(To be continued)*

## பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023, பிற்பகல் 1.00 மணி.(சனிக்கிழமை).

**The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.**

**Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).**

Thank you.

### நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors.
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




## Are you or a loved one struggling with ADDICTIONS?

Recovery is Possible

Vasantham Presents:

**Tamil Addiction Recovery Program**

**போதையில் இருந்து விடுபட இலவச வகுப்புகள் தமிழில்**

- **Cost:** Free!
- **When:** Every Saturday 10:00 AM to 12:00 PM
- **Where:** The Hub Mid-Scarborough 2660 Eglinton Ave East
- **How to register:** Call Vasantham Wellness Centre at தொடர்புகளுக்கு அழைக்கவும் - வசந்தம் 416-847-4172
- **Who can participate:** People 18+ who are facing addiction challenges

Funded by the SUAP/ HEALTH CANADA

(20 பக்கத் தொடர்ச்சி)

# விநாயகர் விமர்சனம்

ஆனால், பிரித்தானிய ஆட்சி காலப்பகுதியிலிருந்து தக்கவைக்கப்பட்டு வந்த முதன்மைத்தனம் படிப்படியாகக் வீழ்ச்சியடைந்து இப்போது வெறும் பேச்சளவில் மாத்திரமே கடந்தகாலப் பெருமைகளாக இருப்பது தெரிகிறது. மூன்று தசாப்தகால யுத்தம் கல்விசார் அடைவுகளின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தாலும் யுத்தம் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் அதே மோசமான நிலை தொடர்வதை நியாயப்படுத்தவும் முடியாது மன்னிக்கவும் முடியாது.

போதைப் பொருள் பாவனை, வன்முறை, கல்வீச்சு, வாள்வெட்டுக்கலாசாரம் போன்றவற்றிற்கு இளைஞர் சமூகம் அடிமைப்பட்டு போயுள்ள நிலையில் ஆசிரிய சமூகம் மாணவர்களுக்குப் பயப்படும் நிலை உருவாகியுள்ளது. வகுப்பறையில் கண்டித்தால் வீட்டுக் கல்லெறிவார்கள் என்று ஆசிரியர்கள் பலர் கூறினார்கள். நமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்கிப் போவது சரீரப்பாதுகாப்புக்கு நல்லதென அவர்கள் நம்புகிறார்கள். பெற்றோர் சொல்லுக்கு பிள்ளைகள் கட்டுப்படுவதில்லை.

கனடா உட்பட மேல்குலக நாடுகளில் வாழும் உறவினர்கள் அனுப்பும் பணத்தில் ஒரு மேட்டார் சைக்கிள், ஒரு ஐ போன், தமிழ் சினிமா காட்டும் நெகடிவ் ஹீரோயிஸத்தின் இன்றைய குத்தகைக்காரர்களாக பெடியன்கள். கட்டப்பஞ்சாயத்து, சினிமா கட்டவுட்டுக்கு பால் ஊற்றுவது போன்ற கருமங்களை கடைப்பிடித்து வாழ்கிறார்கள். ஆனால், போரினால் பாதிக்கப்பட்டு வாழ்விழந்த நிலையில் எதுவும் செய்ய வழியில்லாமலும் குழந்தைகளுக்கு கற்பிக்க முடியாத நிலையிலும் கணிசமான குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்கு கல்வியில் உதவி செய்ய தமிழ் தனவந்தர்கள் முன்வரவேண்டும். போராடிக்களைத்த சமூகத்திற்கு அரசாங்கம் எதுவும் செய்யும் என நம்புவதற்கில்லை. மேற்குலகில் உள்ள தமிழ் தனவந்தர்கள் இதுபற்றிச் சிந்தித்து அரசாங்கம் அமைத்துள்ள விளையாட்டுத்திடலில் நமக்குரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி எப்படி விளையாடலாம் என்று பார்க்க வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்ச்சமூகத்தின் கல்வித்துறை வளர்ச்சியை முதன்மைப்படுத்தி, இருக்கின்ற வளங்களையும் பெறக்கூடிய வளங்களையும் பயன்படுத்தி அதற்குரிய திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். வடக்கு கிழக்குப் பல்கலைக்கழகங்களில் உள்ளவர்கள் நான் பெரிதா நீ பெரிதா என்ற குடுமிப்பிடிச் சண்டைகளை விட்டுவிட்டு தம்மையும் வளர்த்து தம்மிடம் வரும் மாணவர்களையும் வளர்த்துவிட முயற்சிக்க வேண்டும். கல்வி மட்டும் தான் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த உதவும்.

இன்று இதை ஒரு குறிப்பாக உங்களிடம் பதிவு செய்திருக்கிறேன். நமது வாசகர்கள் இது தொடர்பில் ஒரு உரையாடலை ஆரம்பிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்...

## MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# முள்ளிவாய்க்கால் பேரவலம் (மே 18)

பாதுகாப்பு வலயமென்று பசப்பு வார்த்தைகூறி
பரந்து வாழ்ந்த எம் பண்பான மக்களை
முள்ளிவாய்க்கால் என்ற மரணப்பொறிக்கு
வரச்செய்து
முழுக் கதையையும் முடித்துவைத்த நாளே
மே 18
பத்து ஆண்டுகள் பறந்தோடி விட்டாலும்
நித்தம் நித்தம் நினைவில் வரும்நாளே
இந்நாள்
பாதுகாப்பென நம்பிய பதுங்குகுழிகள்
சவக்குழியாகின
பாதகர் மருத்துவ மனைகளையும் பதம்
பார்த்தனர்
காயப்பட்டவரும் காயம் ஆற்றியோரும்
காற்றோடு கரைந்தனர்
கொத்துக் குண்டுகளையும் கந்தக எறி-
கணைகயையும் கொட்டி
கொத்துக் கொத்தாக எம்மக்களை
கொன்றொழித்த நாள்
கை கால் இழந்தும் கட்டிய கணவனை
இழந்தும்
பெற்ற பிள்ளையை இழந்து பிரியமான
மனைவியை இழந்தும்
பேதலித்து நின்றனர் பெற்றோரும் உறவுகள்
கொஞ்சி விளையாடிய குழந்தைகள் முதியவர்
குடும்பமாகக் கொல்லப்பட்ட கொடிய நாள்
வீர மங்கையரான எம் விவேகப் பெண்களை
சிங்கள மிருகங்கள் சின்னாபின்ன
மாக்கியநாள்
சரணடைந்தோரையும் சக்தியற்று
இருந்தோரையும்
இனவெறியர் இல்லாமல் ஆக்கிவிட்ட நாள்
எஞ்சிய மக்களை ஏமாற்றி அழைத்துச்சென்று
முட்கம்பி வேலிகளுள் முடக்கிய நாள்
வெள்ளைக் கொடியோடு போனஎம்வீரர்களை
வீணர்கள் வெட்டி வீழ்த்திய நாள்
வற்றிய முலையில் வாய் வைத்தபடி
வெந்துபோன வாலிபம் மாறாத தாயும் சேயும்
முழுமாதக் கற்பிணிகளை மூத்தோரை
பல்குழல் பீரங்கிகள் பதம்பார்த்த நாள்
சுடலை காணாத செத்த பிணங்கள்
நினைத்து நினைத்து நிலைகுலைந்த
உறவுகள்
தாலாட்டுக் கேட்டு தூங்கிய சிசுகள்
ஒப்பாரி ஓசையுடன் ஓய்ந்துபோன நாள்
கொள்ளிக் குடமுமின்றி கொள்ளிவைக்க
ஆளுமின்றி
குதறி எறியப்பட்ட குடும்ப உறவுகள்
ஐ.நா வரும் அமெரிக்கா வரும் இந்தியா
வருமென
எதிர்பார்த்து ஏங்கிய மக்கள் எல்லோரையும்
கூட்டுச் சதிசெய்து கொன்றொழித்த
கொடூரநாள்
சிதறுண்ட சீவன்கள் சின்னாபின்ன மாகியபடி
காரிருள் கடந்த காலை வேளையில்
நடைப்பிணங்களும் நடவாத பிணங்களுமே
எஞ்சியிருந்தன
முள்ளிவாய்க்கால் முடிந்த முடிவல்ல ஆரம்பம்
மே 18 அழுவதற்கல்ல எழுவதற்கு
காகிதத்தில் இடம் உள்ளது கவிதை எழுத
இதயத்தில் வரிகள் இல்லை வலிகளைத்
தவிர.

*(2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் நடந்த பேரவலத்தின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி எழுதப்பட்ட கவிதை.)*

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# திருக்குறளில் வாணிக தர்மம்

**திருமதி. ஜோதி ஜெயக்குமார்** (B.Com, MA)
**வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா**
**நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்**
Jothy.thirukural@gmail.com



தெய்வப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளானது மனிதன் தனது வாழ்விலே செல்ல வேண்டிய அறப் பாதைகளையும், வாழ்விற் கடைபிடிக்க வேண்டிய அறநெறிகளையும் மிக ஆழமாக எடுத்துரைக்கின்றது. உலகிலே எத்தனை இலக்கியங்கள் இருந்தாலும் திருக்குறளே உலகோர் அனைவருக்குமான பொது அறங்களை எடுத்துக்கூறும் முதனிலை நூலாக விளங்குகின்றது. ஜி.யு.போப் அவர்கள் தொடங்கி இன்றுவரை பல்லின அறிஞர்களும் திருக்குறளை மொழிபெயர்த்துத் தம் இனம் வாழ வழிகாட்டுகின்றனர். பல திறத்தாருக்கும் வேண்டப்பட்ட அறநெறிகளைக் கூறுகின்ற திருக்குறளில் வணிகர்களுக்கான வாணிக தர்மம் எப்படிக் கூறப்பட்டுள்ளது என்பதனை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்ப காலங்களிற் பண்டமாற்று முறையில் நடைபெற்ற வாணிபம், இன்று தனிநபர் வியாபாரங்கள், சிறு வியாபாரங்கள், பாரியளவிலான வியாபாரங்கள், சர்வதேச வியாபாரங்கள், இணையத்தள வியாபாரங்கள்வரை வாணிகத்துறை விரிவு பெற்று, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் டிஜிட்டல் நாணயம்வரை வளர்ச்சியடைந்துள்ள ஒரு துறையாக மாறியுள்ளது. பெருமளவில் வேலை வாய்ப்புகளைப் பெறக்கூடிய துறையாகவும் வாணிபத்துறை இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. எத்தனை வளர்ச்சிகளை இத்துறை எட்டினாலும் வாணிக தர்மம் பேணப்படல் அவசியமானது.

வாணிக தர்மம் பேணுவது எப்படி என்பதைத் திருவள்ளுவப் பேராசான் பின்வருமாறு கூறுகிறார். ஒரு வணிகர் எப்பொழுதும் தான் விற்கும் பொருட்கள், சேவைகளைத் தானேதான் பயன்படுத்தப் போவதாக எண்ண வேண்டும். ஒரு வணிகர் தன்னை ஒரு நுகர்வோனாக எண்ணிக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறார். அறம் தவறாத வியாபாரிகள் மக்களை ஒருபோதும் ஏமாற்றமாட்டார்கள். எனவே வாணிபம் செய்பவர் பிறர் பொருளையும் தன் பொருள்போலக் கருதி வாணிகம் செய்ய வேண்டும் என்கிறார். நேர்மையான வணிகத்தினூடாகத்தான் வணிகரும், அவர்தம் வணிகமும் மேன்மையுற முடியும் என்ற அறநெறியைப் பின்வரும் குறள்மூலம் விளங்கவைத்துள்ளார்.

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின்** (குறள் 120)

வாணிகத்தில் எப்பொழுதும் நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் போன்றவை மிகப் பிரதானமானவை. எப்பொழுதும் "நுகர்வோன் என்பவன் பகுத்தறிவாளன்" என்ற கேள்வி விதிக்கான எடுகோளின் உண்மைத்தன்மையினை ஒவ்வொரு வணிக நிறுவனங்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். நுகர்வோரை வியாபார நிறுவனங்கள் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. இன்று தரமற்ற பொருட்கள், கலப்படம், போலிப் பொருள்விற்பனை, காலாவதியாகிய பொருட்களை விற்றல் போன்றன அதிகரித்துச் செல்கின்றன. பெருட்களுக்கு விலையிடும்போது நியாயத்தன்மை பேணப்படவேண்டும். ஆனால் இன்று பல வியாபார அமைப்புகள் தமது இலாப நோக்கினையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதுடன், மக்கள் நலனில் அக்கறையின்றிச் சமூகப் பொறுப்பற்ற நிறுவனங்களாக இருக்கின்றன. இன்று பல வணிகர்களும் "செய்யுந் தொழிலே தெய்வம்" என்ற அறநெறியிலிருந்து விலகுவதனையும் அவதானிக்க முடிகிறது. உண்மையில் வாணிப அறத்தினைப் பேணாத வியாபாரங்கள் பொருளாதாரத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது.

**வையகம் காப்பவரேனும் - சிறு**
**வாழைப்பழக்கடை வைப்பவரேனும்**
**பொய்யகலத் தொழில் செய்தே - பிறர்**
**போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.**

என்று மகாகவி பாரதியார் கூறுகின்ற வணிக தர்மத்தினையும் இவ்விடத்தில் நினைவு படுத்தலாம்.

வாழ்வில் நடுநிலை பேணல் என்பது மிகவும் அவசியமானது. அது வியாபாரத்திற்கும் பிரதானமான அறநெறியாகும். நடுநிலை என்ற அதிகாரத்திற் திருவள்ளுவர் எமக்குத் தராசினைச் சுட்டிக்காட்டி அதன் நடுமுள் எப்படி ஒரு பக்கம் சாய்ந்து விடாது நிற்கின்றதோ அப்படித்தான் சான்றோர்களும் நடுநிலை தவறாது செயற்படவேண்டும் என்கின்றார். எனவே வாணிகத் தொழிலில் நடுநிலைக் கோட்பாடு உயிர்க் கோட்பாடாகிறது. ஆகவே ஒருபக்கம் சாயாமற் சமன் செய்து, சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை வியாபாரிகளிடமும் இருக்கவேண்டும் என்பதனை இக்குறளிலிருந்து உணர முடிகிறது.

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்**
**அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி.** (குறள் 118)

செல்வத்தை அருள் வழியிலும், அன்பு வழியிலும் நின்றே ஈட்டல் வேண்டும். தீய வழிகளிலும், நேர்மை தவறிய வழிகளிலும் தேடிக் கொள்ளும் செல்வமானது.

நமக்குத் தகாதது. அதனை நாம் அனுபவிக்காது விலக்கி விட வேண்டுமென்றும், தனக்கு நன்மையைத் தந்தாலும் நடுவுநிலைமையைக் கடந்து உண்டாகும் ஆக்கத்தை அப்பொழுதே கைவிடுக என்றும் திருவள்ளுவர் அறிவுரை கூறுகிறார். இவற்றினைப் பின்வரும் குறள்கள்மூலம் நாம் விளங்கிக்கொள்ளலாம்.

**அருளொடும் அன்பொடும் வாராப்**
**பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்** (குறள் 755)

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்** (குறள் 113)

எப்பொழுதும் அறவழியில் வருபவையே எமக்குச் சிறப்புகளைத் தரவல்லவை. அறமற்ற வழிகளால் வரும் எதுவுமே எமக்கு உண்மையான உயர்வுகளைத் தரமாட்டா. அவற்றால் எப்பொழுதும் தீமைகளும், துன்பங்களுமே விளையும். அதுபோலவே வாணிகத்திலும் வியாபார தர்மம் பேணப்படும்போதுதான் அந்தத் தொழிலில் வெற்றி பெறமுடியும். இதனால் பின்வரும் குறள் வாணிகத்திற்கும் மிகப் பொருந்தும்.

**அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்**
**புறத்த புகழு மில.** (குறள் 39)

ஒரு வியாபார வளர்ச்சிக்கு விளம்பரம் மிக அவசியமானது. விளம்பரம் இன்றேல் வியாபாரம் இல்லை. ஆனால் போலி விளம்பரங்கள் இன்று அதிகரித்து செல்கின்றன. இன்று இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட வணிகர்களும், வணிக நிறுவனங்களும் தமது கவர்ச்சிகரமான சொல்வலிமையாலும், தந்திரோபாயங்களாலும் தரமற்ற பொருட்கள், சேவைகளைத் தரமானவையென ஏமாற்றி விற்றுவிடுகிறார்கள். இவைகளால் மக்கள் உளவியல் ரீதியாக ஏமாற்றப்படுகிறார்கள். வினைத்தூய்மை அதிகாரத்தில் எந்தவொரு செயலைச் செய்யும் போதும் அங்கு தூய்மை பேணப்பட வேண்டும் என்றே திருக்குறள் இடித்துரைக்கின்றது. வஞ்சனைகளாலும், அநீதியான வழிகளிலும் சேர்க்கப்படும் எவையும் ஒருபோதுமே நிலையான மகிழ்வினைத் தராது. அவை நிட்சயம் ஏதாவதொரு வழியில் அழிந்துவிடக்கூடியவை என்கிறார் திருவள்ளுவர். இந்நிலையினைச் சுடாத பச்சை மண் பாத்திரத்தில் ஊற்றி வைத்த தண்ணீருடன் ஒப்பிட்டு விளங்கவைக்கிறார்.

**சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று** (குறள் 660)

ஆகவே பழி பாவங்களுக்கு அஞ்சியே நாம் வாணிகம் செய்து, பொருளீட்ட வேண்டும். தீவினைகளால் வரும் செல்வத்தை விட வறுமையே மேலானது என்று அறம் உரைக்கின்றார்.

**பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.** (குறள் 657)

நாங்கள் நினைத்த வழிகளிலெல்லாம் தொழில் செய்யலாம், எந்த வழியிலும் பொருளீட்டலாம் என்பது வணிக தர்மம் அல்ல. எப்பொழுதும் நேர்மையான வழியிற் செய்யும் தொழில்களே நீண்ட காலம் நிலைத்து நிற்கும். குற்றமற்ற வழிகளில் ஈட்டப்படும் செல்வமே நிரந்தர மகிழ்வினைத் தரவல்லது என்பதனை இக்குறள் நமக்கு உணர்த்துகிறது.

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.** (குறள் 754)

ஆகவே தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுவதற்கமைய மனுநீதி மீறாது வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைப்போம். இவ் அறத்தினை வாணிகத்திலும் கடைப்பிடிப்போம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** (குறள் 50)

**வாழ்க தமிழ்.!**
**வாழ்க திருவள்ளுவம்.!!**

# "சிங்கப்பூரை சுற்றிப் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை" முதல்வரின் பயணம் குறித்து சீமான் விமர்சனம்



"சிங்கப்பூரை சுற்றிப் பார்க்கலாம், ஜப்பானை சுற்றிப் பார்க்கலாம் அதைத் தவிர ஒன்றும் இல்லை. முதல்வர் உட்கார்ந்திருக்கிறார், அந்தப் பக்க நாற்காலிகள் எல்லாம் காலியாக கிடக்கிறது. முதலீடுகளை கேட்டு நாற்காலியைப் பார்த்து பேசிக் கொண்டிருக்கிறாரா முதல்வர்?" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.குன்றத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட கரைமா நகரில் தனியார் நிறுவனத்திற்காக திமுக அரசு அப்பகுதியில் வசிப்பவர்களின் வீடுகளை இடிப்பதனால் வாழ்விடங்களையும், வாழ்வாதாரத்தையும் இழந்த பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வியாழக்கிழமை கலந்துகொண்டார்.பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், முதல்வரின் சிங்கப்பூர் பயணம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "சிங்கப்பூர் மொத்த நாடையும் சுற்றிப்பார்க்க 45 நிமிடம்தான் தேவைப்படும். சென்னையில் பாதியளவுகூட கிடையாது. தமிழ்நாட்டில் ஒரு இரண்டு மாவட்டங்களின் அளவுதான் இருக்கும்.அந்த நாட்டில் எந்த வளமும் கிடையாது. கடல் மட்டும்தான் இருக்கும். மரங்கள்கூட இல்லாத நாட்டிற்கு கப்பலில் வேரோடு மரங்கள் கொண்டுவந்து நடப்படும். அந்த நாட்டில், மலைவளம், கடல்வளம், நீர்வளம், காட்டு வளம், மனிதவளம் என அனைத்தையும் கொண்டுள்ள தமிழ்நாடு, சிங்கப்பூர் போன்ற சிறிய நாட்டிற்குச் சென்று எங்களுக்கு முதலீடு செய்வதற்கு முதலாளிகளை அனுப்புமாறு கேட்பது என்பது ஓர் இனத்தை, ஒரு நாட்டை அவமதிப்பதாகும்.

திராவிடக் கட்சிகள் 6070 ஆண்டுகள் ஆட்சி செய்துவிட்டு சின்னஞ்சிறிய நாடான சிங்கப்பூருக்கு சென்று அங்கிருந்து முதலீட்டாளர்களைக் கொண்டு வரப்போவதாக கூறுவது அவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது. 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்று கூறுகிறார்கள். 6 புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது எனக்குப் புரிகிறது. அது எந்த மாதிரியான புரிந்துணர்வு ஒப்பந்தம், என்னென்ன ஒப்பந்தங்கள் என்று கூறுங்கள். குறைந்த கட்டணத்தில் தடையற்ற மின்சாரம், நிலத்தடி நீர் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். எத்தனை ஆயிரம் நிலங்களை வேண்டுமானாலும் அரசே எடுத்து தரும்.ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் மின்தடை ஏற்பட்டு உற்பத்தியில் இழப்பு ஏற்பட்டால், அதை மத்திய மாநில அரசுகள் ஈடுகட்டும் என்று ஒப்பந்தம் போடப்படுகிறது.

ஆனால், மக்கள் 8லிருந்து 9 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருக்கிறோம். நாங்கள் செலுத்தும் மின் கட்டணத்திற்கும், இந்த அந்நிய தொழிற்சாலைகளின் முதலாளிகள் செலுத்துகின்ற மின் கட்டணத்துக்கும் ஒன்றாக இருக்கிறதா? என்றால் இல்லை. மக்கள் செலுத்துவதைவிட அவர்கள் பலமடங்கு குறைவாக செலுத்துகின்றனர். அப்படியென்றால், யாருக்கான நாடு? யாருக்கான கட்டமைப்புகள் இங்கு கட்டமைக்கப்படுகிறது? வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவது மக்களின் சேவைக்கா? அல்லது அவர்களது தேவைக்கா? ஹுண்டாய் வந்தது, அங்கு எத்தனை தமிழக இளைஞர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது? இதே திமுக ஆட்சியில்தான் நோக்கியா வந்தது, நோக்கியா தொழிற்சாலை இப்போது எங்கே? மூடிச் சென்றுவிட்டனர்.

அங்கு வேலை செய்த இளைஞர்கள் எங்கே இருக்கின்றனர் என்பது யாருக்கும் தெரியாது. தனிபெரும் முதலாளிகள் வாழ்வதற்கும் அவர்கள் வளர்வதற்குமே திட்டங்களையும், சட்டங்களையும் இயற்றிக்கொண்டிருப்பதை வளர்ச்சி என்று பேசுவது பைத்தியக்காரத்தனம். எனவே முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்குச் செல்வதை வேடிக்கையாகத்தான் பார்க்கிறேன்.முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை. ஆனால், முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார். இரண்டு லட்சம் கோடி முதலீடு வருவதாக கூறினார். எங்கே வந்தது? அவர் இறந்த 67 ஆண்டுகளாகிவிட்டது. திமுகவினர் கடந்த ஆண்டு துபாய், அரபு நாடுகள் எல்லாம் சுற்றி முதலீடு வருவதாக கூறினார்கள். வந்திருந்தால், எந்தெந்த துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது? எத்தனை ஆயிரம் பேருக்கு அதில் வேலை கிடைத்திருக்கிறது?சிங்கப்பூரை சுற்றிப் பார்க்கலாம், ஜப்பானை சுற்றிப் பார்க்கலாம், அதைத் தவிர ஒன்றும் இல்லை. முதல்வர் உட்கார்ந்திருக்கிறார், அந்த பக்க நாற்காலிகள் எல்லாம் காலியாக கிடக்கிறது. முதலீடுகளை கேட்டு நாற்காலியைப் பார்த்து பேசிக் கொண்டிருக்கிறாரா முதல்வர் விமான டிக்கெட், போக்குவரத்து செலவும் எல்லாம் தண்டம்'' என்று அவர் கூறினார்.

# கள்ளச்சாராய மரணம், சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து ஆளுநரிடம் அதிமுக சார்பில் பழனிசாமி புகார் மனு



திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக கண்டனம் தெரிவித்து அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம், பேரணி நடத்தப்பட்டது. பின்னர், முக்கிய நிர்வாகிகள் ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்து திமுக அரசின் ஊழல் மற்றும் முறைகேடு குறித்து புகார் மனு அளித்தனர்.தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் கடந்த2 ஆண்டுகளாக பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாகவும் அதிமுக தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது.இந்நிலையில், திமுக ஆட்சி நிர்வாகத்தை கண்டித்து, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் சென்னை சின்னமலை வேளச்சேரி சாலையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முன்னாள் அமைச்சர்கள், முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். அவர்கள் திமுக அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.பின்னர், ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி தொடங்கியது. பழனிசாமி தலைமையில் முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், பா.வளர்மதி, கோகுல இந்திரா, ஓ.எஸ்.மணியன், ராஜேந்திர பாலாஜி மற்றும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் அணிவகுத்து வந்தனர்.

அனைவரும் சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகே தடுத்து நிறுத்தப்பட்டனர். 10 பேர் மட்டும் ஆளுநரை சந்திக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, பழனிசாமி தலைமையில் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, ஜெயக்குமார், சி.வி.சண்முகம், பெஞ்சமின், முன்னாள் எம்.பி. பாலகங்கா ஆகியோர் ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்து, திமுக அரசு மீதான புகார் மனுவை கொடுத்தனர். பின்னர், செய்தியாளர்களிடம் பழனிசாமி கூறியதாவது:

சிபிஐ விசாரணைக்கு கோரிக்கை: 'திமுக அரசின் ஊழல் மற்றும் முறைகேடு' என்ற தலைப்பில் ஆளுநரிடம் புகார் மனு அளித்துள்ளோம். விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 23 கள்ளச் சாராய மரணங்கள் நிகழ்ந்துள்ளன. திமுக அரசின் திறமையின்மை, ஆளுங்கட்சியினரே கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபடுவதே இதற்கு காரணம். இதுதொடர்பாக சிபிஐ விசாரணை கோரியுள்ளோம்.போதைப் பொருள் நடமாட்டம்: தூத்துக்குடி மாவட்டத்தில் மணல் கொள்ளையர்களால் கிராமநிர்வாக அதிகாரி கொலை செய்யப்பட்டுள்ளார். சேலம் மாவட்டத்திலும் ஒரு கிராம நிர்வாக அலுவலர் மீது கொலை முயற்சி நடந்துள்ளது. இருசக்கர வாகனங்களில் சென்று செயின் பறிக்கும் நிலை மாறி, இப்போது காரில் சென்று செயின் பறிக்கின்றனர்.

முதியோரை குறிவைத்து நகை, பணத்துக்காக கொலைகள் நடக்கின்றன. கஞ்சா,போதைப் பொருள் நடமாட்டம் என்பது போன்ற சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் குறித்து புகாரில் தெரிவித்துள்ளோம். முதல்வரின் மகன் உதயநிதி, மருமகன் சபரீசன் ஆகியோர் ரூ.30 ஆயிரம் கோடிக்கு மேல் சொத்து குவித்திருப்பதாக, முன்னாள் நிதிஅமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசிய ஆடியோவில் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக தமிழக அரசிடம் விளக்கம் பெற்று, மத்திய முகமைகள் விசாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரியுள்ளோம். உதயநிதியின் ரெட் ஜெயண்ட் நிறுவனம் கடந்த 2010 முதல் 2020 வரை ஆண்டுக்கு 2 படங்களை மட்டுமே தயாரித்து, விநியோகம் செய்துள்ளது.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, 50 படங்களை தயாரித்துள்ளது. இதன்மூலம் ரூ.2 ஆயிரம் கோடிக்கு மேல் வருமானம் கிடைத்ததாக கூறப்படுகிறது. இந்த நிறுவனத்தின் நிதி ஆதாரம், ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி திரையுலகையே கட்டுப்படுத்துவது தொடர்பாக முழுமையாக விசாரணை நடத்த வேண்டும். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, கட்டுமானம், மனை விற்பனையில் நாட்டிலேயே முன்னணி நிறுவனமாக ஜி ஸ்கொயர் நிறுவனம் மாறியுள்ளது. இதன்மூலம் அரசு கருவூலத்துக்கு ரூ.3 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.கணக்கில் வராத மதுபானங்களை மதுக்கூடங்களில் விற்பது மற்றும் விநியோகத்தால் கலால்வரி வருவாய் பாதிப்பு, சட்டவிரோத மதுக்கூடங்களால் இழப்புஎன அரசுக்கு மொத்தம் ரூ.5 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்தும் விசாரணை கோரியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமிக்கு எதிராக அமைச்சர் செந்தில்பாலாஜி அவதூறு வழக்கு

புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமிக்கு எதிராக தமிழக மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளார். டாஸ்மாக் கொள்முதல் செய்யும் மதுபானங்களில், 60 சதவீத மதுபானங்களுக்கு மட்டும் ஆயத்தீர்வை விதிக்கப்படுகிறது. 40 சதவீதத்துக்கு ஆயத்தீர்வை விதிக்கப்படவில்லை என்பது உள்பட ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல்கள் நடந்துள்ளதாக புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி, தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு எதிராக ஆளுநரிடம் புகார் அளித்துள்ளார்.

இந்தப் புகாரை அக்கட்சியின் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்துள்ளார். ட்விட்டர் பக்கத்திலும் இதுகுறித்த அவதூறு கருத்துகளை பதிவு செய்துள்ளார். பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்துள்ளார். எனவே, தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறு கருத்துக்களை தெரிவித்துள்ள கிருஷ்ணசாமியின் மீது அவதூறு வழக்கு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அன்பின் தொனி - 691

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**தேவன் வசனத்திற்கு செவி கொடுத்தார்கள்**

பேதுரு மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான். பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்துகொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான். அவனுடனே பேசிக்கொண்டு, உள்ளேபோய், அநேகர் கூடிவந்திருக்கிறதைக் கண்டு, அவர்களை நோக்கி: அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப் பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகை யால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான். அதற்குக் கொர்நேலியு: நாலுநாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தேன், அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று: கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தான தருமங்கள் தேவசந்நிதில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள்அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கயிருக்கிறான், அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன், நீர் வந்தது நல்ல காரியம், தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி:

**பேதுரு இயேசுவை பிரசங்கித்தான்**

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக்கொண்டு அவர் சாமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. யோவான் ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயாநாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார், தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்க ளுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிற தையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புற ஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

**ஜெபத்திற்கான சந்தற்பம், நோக்கம், உதாரணங்கள் -** Occasions, Objects, Examples of Prayer

அவன் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, அவன் அவருடைய சமுகத்தைக் கெம்பீரத்தோடே பார்க்கும்படி அவர் அவன்மேல் பிரியமாகி, அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார். **- யோபு 33: 26**

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். **- மத்தேயு 5: 44**

**தொடரும்...**

## கடந்தவையும் கடப்பவையும் (58)

*கொஞ்சம் கனமான மனதுடனே திரும்பும் போது
நெஞ்சம் விரும்பும் வீரபத்திரர் எதிர்ப்படவும் - அவரை*

*முன்னர் இல்லாத புதுப் பொலிவுடன் - புது
வண்ணப் பூச்சோடு கண்ட காட்சி - மன*

*மகிழ்ச்சியைத் தந்திடவே வாசலில் நின்றபடி
வணங்கிய போது மனம் நெகிழ்ந்தது*

*முன்னர் ஒரு காலம் திருவிழா என்றால்
பென்னம் பெரிய அளவில் பணம் செலவழித்து - மிக*

*குதூகலமாய்க் கொண்டாடுவர் - அன்றைய
வெளிநாட்டுப் பணம் தெரியாப் பெரியவர்கள் - மிக*

*சிறுவர்களாய் நாம் இருந்த காலம்
சிகரங்கள் பல கட்டி கண்கவர் - மின்*

*விளக்குகள் பல பூட்டி மேடை போட்டு - ஊரெல்லாம்
மணக்க சாம்பிறாணி வாசத்தோடு*

*பெரியவர் சிறியவர் பேதமின்றி - எல்லோரும்
உரியவர் இவ்வூருக்கு என எண்ணி - அதி*

*அற்புதமாய்ச் செய்வார்கள் திருவிழா - அன்று
நற்பெயர் பெற்ற நாதஸ்வர காரர்களும்*

*சிறப்பாக வாசிப்பர் போட்டி போட்டு
அனல்ப் பறக்க அடிக்கும் மேளத்திற்கு ஏற்றாற் போல - அன்றைய*

*திருவிழாவில் நாதஸ்வரக் கச்சேரிக்கு தனி மதிப்பு - ஏனைய
பெரும் இசைக் கச்சேரிகளோடு 'சின்ன மேளம்'*

*என்னும் பூட்டி அறிமுகப் படுத்திய கண்ணுக்கு விருந்தான ஆட்டமும்
அமோகம் தான் - பின்னர்*

*போராட்டம் தொடங்க தினமோட்டம் அத்தோடு - வான்
நோட்டமொடு ஒருநாள் கோவில் முகப்பில் விமானம்*

*குண்டையும் போட வழிப்போக்கர் யாரோ
மாண்டும் போக*

*அண்டையில் ஆருமில்லா சூனியப் பிரதேசமாய்*

*இருந்த காலம் ஒன்றும் இருந்ததுதான் - மிக
நெருக்கமாய் இருந்தவர்கள் திக்குத் திக்காய்*

*ஊர்கள் கடந்து நாடுகள் பல கடந்து
ஆராரோ எல்லாம் உறவினராய் வந்து கலந்து - மீண்டும்*

*புதியவர்கள் போல் அங்குள்ள இளையோருக்கு
தெரியாதவராய் ஆகியுள்ளோம் பலரும் தான்*

*இப்படியே கும்பிடும் போது
அப்போ நடந்தவையும் இப்போ நடப்பவையும்*

*மனக்கண்ணில் மாறி மாறி வந்து போக
சுணக்கமின்றி விரைவாய்க் கும்பிட்டு விட்டு மேலும் தொடருகிறோம்*

(தொடரும்)

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

## கனடாவிற்கு கர்நாடக இசைக் கச்சேரி செய்வதற்காக வருகின்றார் சுதா ரகுநாதன் அவர்கள்

கனடா பாரதி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி சுதா ரகுநாதன் அவர்களின் கர்நாடக இசைக் கச்சேரி எதிர்வரும் யூன் 18ம் திகதி ஈற்றொபிக்கோ நகரில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு இங்கே காணப்படும் அறிவித்தலைப் பார்க்கவும்.



மலேசிய மடல்

# இந்து சங்க ஆண்டுக் கூட்டத்தை தடுக்கமுயன்ற மோகன் ஷான் நீதிமன்றத்தில் மண்டியிட்டார்......8000 வெள்ளி தண்டம் விதிப்பு



நக்கீரன்

**"சிவநெறிச் செல்வர்" தங்க கணேசனுக்கு சோதனை மேல் சோதனை இந்து சங்க ஆண்டுக் கூட்டத்தை தடுக்கமுயன்ற மோகன் ஷான் நீதிமன்றத்தில் மண்டியிட்டார் வெ. எட்டாயிரம் தண்டம் விதிப்பு**

கோலாலம்பூர், மே24: மலேசிய இந்து சங்கத்தின் 46-ஆவது ஆண்டுக் கூட்டம் அதன் தேசியத் தலைவர் "சிவ-நெறிச் செல்வர்" தங்க கணேசன் தலைமையில் வரும் ஞாயிற்றுக்கிழமை மே 28-ஆம் நாள் நடைபெற இருக்கிறது. இதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோலாலம்பூர் உயர்நீதிமன்றத்தில் முன்னாள் தலைவர் டத்தோ மோகன் ஷான் வழக்கு தொடர்ந்தார்.



இப்பொழுது அந்த வழக்கை திரும்பப் பெற முயன்ற அவர், நீதிமன்றத்தின் கண்டிப்புக்கும் தண்டனைக்கும் ஆளானார் தங்க கணேசன் தலைமையிலான நிருவாகத்திற்கு செலவுத் தொகையாக எட்டாயிர வெள்ளி அளிக்க வேண்டும் என்றும் மோகன் ஷானுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஓர் ஆண்டாக தங்க கணேசன் படாதபாடு பட்டுவருகிறார். நீதிமன்றத்திற்கு அலைவதுடன் பலவித சிக்கலையும் எதிர்கொண்டதால், ஏறக்குறைய ஆறு மாத காலம்கூட அவரால் தேசியத் தலைவர் பொறுப்பை நிறைவேற்ற முடியவில்லை. இந்து சங்கத்திற்கும் மலேசிய இந்து சமுதாயத்திற்கும் ஏதாவது ஆக்கப்பூரவ பணியை ஆற்றலாம் என்று முனைப்பு காட்டும் அவரைத் தடுத்து நிறுத்தும் விதமாக தொடர்ந்து வழக்குக்கு மேல் வழக்கைப் போட்டு, அவரை சோதனைக்கு உள்ளாக்கி வருகிறார், மோகன் ஷான்.

கடந்த ஆண்டு இந்து சங்கத் தலைவர் தேர்தலின்போது, இந்து சங்க உறுப்பினர்களாலும் மத்தியப் பேரவை அங்கத்தினர்களாலும் புறக்கணிக்கப்-பட்ட மோகன் ஷான், தன் தோல்வியை ஒப்புக்கொண்டு கூட்டம் நடைபெற்ற அரங்கத்தில் இருந்து தன் பரிவாரங்கள் நால்வருடன் வெளியேறினார்.

அடுத்த இரண்டு நாட்களில் தான்தான் இன்னமும் தலைவர் என்று சொல்லிக் கொண்டு நீதிமன்றத்திற்கு சென்ற அவரை, நீதிமன்றம் ஏற்கவில்லை. "சிவநெறிச் செல்வர்" தங்க கணேசன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லும் என்று அறிவித்தது நீதிமன்றம்.

அத்துடன் மோகன் ஷான் ஒதுங்கினாரா, ஓய்ந்தாரா என்றால் அதுவும் இல்லை;

மலேசிய இந்து சங்கம் தனக்கு கடன் பட்டுள்ளது என்றும் சேரவேண்டிய "அலவன்ஸ்" தொகையை வழங்க வேண்டும் என்றெல்லாம் கேட்டு வழக்குகளைத் தொடர்ந்து கொண்டே இருந்தார் இந்த நிலையில் அடுத்த ஆண்டுக் கூட்டமும் நெருங்கிவிட்டது; இதை எதிர்த்தும் மோகன் ஷான் நீதிமன்றத்திற்குச் சென்றார்.



இதற்கிடையில், கடந்த 6 மாத காலத்தில் மலேசிய இந்து சங்கம் பட்டிருந்த கடனில் வெள்ளி ஒரு லட்சத்துக்கும் மேல் அடைக்கப்பட்டுள்ளது; அதைப்போல சங்கத்தின் தேசியத் தலைமையக நிருவாக நடைமுறைக்காக போதிய நிதிக் கையிருப்பும் உள்ளது குறிப்பாக, மலேசிய இந்து சங்கத்திற்கு சொந்தமான தாப்பா அருள்மிகு ஜெகநாதர் ஆலயத்தின் பொருளகக் கணக்கில், தங்க கணேசன் பொறுப்பேற்ற போது வெ.24 ஆயிரம்தான் இருந்தது இதை 74ஆயிர வெள்ளிக்கு மேல் தங்க கணேசன் உயர்த்தி இருக்கிறார் என்று தேசியப் பேரவை உறுப்பினர்கள் சார்பில் தெரிவிக்கப் பட்டது.



கடந்த ஆண்டு, மலேசிய இந்து சங்கத் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்த மோகன் ஷான், தனக்கு பெரும்பான்மை இல்லாததால் மத்தியப் பேரவையில் இருந்தும் வெளியேறினார். இப்பொழுது மீண்டும் இந்து சங்க மத்தியப் பேரவையில் நுழைவதற்காக போட்டி இடுகிறார். அத்துடன், தேசியத் தலைவராக மறுபடியும் வலம்வர விரும்பும் அவர், நாடு முழுவதும் ஆதரவைத் திரட்டி வருகிறார்.

இவ்வளவையும் செய்துக் கொண்டு, ஆண்டுக் கூட்டத்திற்கும் தடைவிதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டிய மோ-கன், அது குறித்த வழக்கு இன்று மே 24, புதன்கிழமை கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது, வழக்கைத் திரும்ப பெற விரும்புவதாக நீதிபதி முன்பு அந்தர்பல்டி அடித்தார்.

இதனால், நீதிபதியின் கண்டிப்புக்கும் தண்டவிதிப்புக்கும் ஆளானார் மோகன் ஷான். மலேசிய இந்து சமுதாயமும் இந்து சங்க உறுப்பினர்களும் எல்லாவற்றையும் கவனித்து வருகின்றனர்.

மலேசிய இந்து சங்கத்திற்கு சொந்தமான மானியத்தில் முறைகேடு நடந்திருப்பது குறித்து 3 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தின்போது செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர் அதற்கு பதில் அளித்த மோகன், பத்து பேர் இருக்கும் இடத்தில் தவறு நடக்கத்தான் செய்யும். அரசாங்க அதிகாரிகள் ஊழல் செய்யவில்லையா என்று செய்தியாளர்களிடம் எதிர்க்கேள்வி கேட்டதெல்லாம் நாளேடுகளில் செய்தியாக வந்தன.

ஊழல்வாதிகளையும் திருடர்களையும் துணைக்கு அழைக்கும் மோகன் ஷாண், 13 ஆண்டுகளில் செய்ய முடியாததையா, மீண்டும் வந்து செய்யப்போகிறார்? இவற்றையெல்லாம் அவதானித்து, இந்து சங்கத்தின் எதிர்காலத்தைக் கருதி, அதன் அங்கத்தினர்கள் நடுநிலையாகவும் நியாயமாகவும் முடிவெடுக்க வேண்டும்.

" தொண்டு - Service "

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1049

## மாணிக்கப்பிள்ளையார் கோயில் அட்டன், மலையகம்

*" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
குண்ணிற் பணிமின் கனிந்து ".*

இவர் தூங்கிக் கொண்டிருந்த திண்ணைக்குச் சற்றுத் தூரத்திலிருந்து, ஆலயநிர்வாகத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஒன்றுகூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர். மாணிக்கப்பிள்ளையார் கோவிலின் அடிக்கல் நாட்டும் வைபவம் எப்படி நிகழப் போகின்றது? என்ன செய்வது? என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட பெரியவர், நித்திரை விட்டெழுந்தவர் போல எமுந்து, "ஐயா ஏன் கவலைப்படுகிறீர்கள்? என்ன நடந்தது? என்னால் உங்களுக்கு உதவ முடிந்தால் மகிழ்ச்சியடைவேன்" என்று கூறினார். பெரியவரின் கந்தல் உடையையும், ஆடம்பரமற்ற தோற்றத்தையும் அவதானித்த ஒருவர், இவரை அலட்சியமாக நோக்கி விடை கூறாது அகன்றார். எனினும் அருகிலிருந்த மற்றொருவர் மாணிக்கப்பிள்ளையார் கோயில் அடிக்கல் நாட்டும் வைபவத்திற்குச் சிற்பாச்சாரியார் வருகை தரமுடியாத நிலையைக் கூறி மனவருத்தப்பட்டார்.

யாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த வயதானவர் "ஐயா நானும் ஒரு சிற்பியே அடிக்கல நாட்டும் வேலைக்குரிய ஆயுதங்களும் என்னிடம் இருக்கின்றன. வேத சாத்திரநூலும் என்னிடம் உண்டு. சாத்திரமுறைப்படி அடிக்கல்நாட்டும் வைபவத்தை நிறைவேற்ற என்னால் முடியும். தாங்கள் விரும்பினால் நான் உதவத் தயாராக இருக்கிறேன்" என்று கூறி, தலையணையாகப் பாவித்த பொதியை அவிழ்து, சிற்பவேலைக்குரிய பொருட்களையும் எடுத்துக் காட்டினார். இச்செய்தி ஏனையோருக்கும் பரவ அனைவரும் மகிழ்ச்சியோடு சம்மதித்தனர். ஆலயத்திருப்பணியை செய்து முடிக்க வந்திருந்த முதியவரும் தாம் ஏற்ற பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார். அடிக்கல் நாட்டும் திருப்பணியும், குறிப்பிட்டநாளில் மிகச் சிறப்பாக நிறைவேறியது. திருப்பணியை நிறைவேற்றிய பெரியவருக்குரிய சன்மானத்தை வழங்க அவரைத்தேடியபோது, அவரை எங்கும் காண முடியவில்லை. அவர் எங்கோ மாயமாக மறைந்துவிட்டார். தான் கோயில் கொள்ளவிருந்த கருவறைக்குத் தானே அடிக்கல் நாட்டும் பணியைச் சிறப்பாகச் செய்துவிட்டு, வந்தசுவடு தெரியாமல் மறைந்த விநாயகரின் பெருமையை, அனைவரும் போற்றித் துதித்தனர். இச்செய்தி காட்டுத்தீபோல எங்கும் பரவ, பிள்ளையாரின் அருட்கருணையை நாடிப் பக்தர்கள், தினந்தோறும் இக்கோயிலுக்கு வந்து வணங்கித் தமது குறைகளை முறையிட்டு நிவர்த்தி பெற்றுச் சென்றனர்.

இவ்வாலயத்திலே காணப்படும் நவக்கிரக விக்கிரகங்கள், ஏனைய ஆலயங்களை விட மாறுபட்டுக் காணப்படுவது புதுமையானது. நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்ய எண்ணியபோதும், அவற்றை அமைப்பதற்குரிய ஆசனக் கல்லை, மலையடிவாரத்திலிருந்து நூறடிக்கும் மேற்பட்ட மலைஉச்சிக்கு எவ்வாறு கொண்டு செல்வது என, ஆலய அறங்காவலர்கள் சிந்தித்தனர். ஆலய அடிக்கல் நாட்டும்பணி சிறப்புற நிறைவேற உதவிய, ஆனைமுகப் பெருமான் கைகொடுப்பார் என்ற நம்பிக்கையில், தும்பிக்கையானைத் தினமும்போற்றி வணங்கியவாறு, நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்ய நாளும் குறிக்கப்பட்டது.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் ஆசனக்கல் அசைவின்றித் தெருவிலேயே கிடந்தது. இவ்வேளையில் ஆசனக்கல் கிடந்த தெருவழியே யானையொன்றைப் பாகன் ஒருவன் ஓட்டிக்கொண்டு வந்தான். யானையைக் கண்ட அறங்காவலர்கள் பாகனை அணுகி, நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய ஆசனக் கல்லை மலையுச்சிக்கு எடுத்துச் செல்ல உதவுமாறு கேட்டனர். யானைப்பாகன் எதற்கும் இணங்கவில்லை. இவ்வேளையில் யானைப்பாகன் ஓட்டிச்சென்ற யானை மெல்ல மெல்ல நகர்ந்து சில அடி தூரம் சென்ற பின்பு, அப்பால் செல்ல மறுத்து அவ்விடத்திலேயே நின்றது. யானைப்பாகன், அங்குசத்தால் குத்தியும், யானைமொழியால் அதற்குக் கட்டளையிட்டும் அதனை ஓட்டிச் செல்ல முடியவில்லை. அந்த யானையோ ஆலயப்பக்கம் திரும்பியவாறு அசைவின்றி நின்றது. அறங்காவலர்களும், யானைப்பாகனும் திகைப்புற்றுக் காணப்பட்டனர்.

இவ்வேளையில், யானை துதிக்கையைத் தூக்கித் தலைமேல்வைத்தவாறு, ஆசனக்கல் கிடந்த இடத்தை நோக்கி வேகமாக வந்தது. ஆசனக்கல்லின் அருகே வந்ததும் முன்னங்கால்களை மடித்துத் துதிக்கையால் ஆசனக்கல்லை தூக்கிக்கொண்டு, ஆலயம் அமைந்திருந்த மலையுச்சியை நோக்கிச் சென்றது. மலையுச்சியை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப்பாதை, பாறைகளும் செடிகளும் நிறைந்து காணப்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் இலகுவாக விலக்கி மலையுச்சியை நோக்கிச் சென்றது. இச்செய்தி எங்கும் காட்டுத்தீ போலப் பரவ, அவ்விடத்தே கூடிய மக்கள் ஆனைமுகப்பெருமானின் கருணையை எண்ணி, அரோகரா கோசமெழுப்பி வணங்கினர். அறங்காவலர்களும் நம்பிக்கையோடு துதித்தால் தும்பிக்கையான் துணையிருப்பான் என்பதை கண்முன் கண்டு, "ஆலயக் கல் சுமந்த ஆனைமுகப்பெருமான்" எனப் போற்றித் துதித்தனர். யானை எவ்வித சிரமமுமின்றி ஆசனக்கல்லை உரிய இடத்தில் வைத்துவிட்டு அமைதியாகத் திரும்பிச் சென்றது.

இவ்வாறான அற்புதங்களோடு, ஆலயத்திருப்பணிகளும் சிறிது சிறிதாக நிறைவேறி, பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய நிர்ணயித்த நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. மூலஸ்தான திருப்பணி, மற்றும் சிற்பங்களுக்கு வர்ணந் தீட்டும் பணி என யாவும் முடிவுற்றபின்னர், ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் மிக விரைவாச் செய்து வந்தது. தமிழ்நாடு திருவானைக்காலைச் சேர்ந்த பிரபல சிற்பியொருவரே ஆலய கோபுர சிற்பங்களைச் செதுக்கியவர். சிற்பியாருடன் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்காக குருக்கள் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்வேளையில் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பதற்கு வரவேண்டிய குருக்களால் குறிப்பிட்ட நாளன்று சமூகமளிக்கமுடியாதென்ற செய்தி கிட்டியதும், கும்பாபிஷேகத்தை ஒத்திவைப்பதென ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. குறிப்பிட்ட தினத்தன்று கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் மீண்டும் இதே சுபநேரத்திற்காக இரண்டு வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும். இந்நிலையில் கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டிய சிற்பி விமானத்தில் புறப்பட்டு விட்டார் என்ற தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. சில மணிநேரத்தின் பின்னர் சிற்பிகள் அட்டன் ஆலயத்திற்கும் வந்து விட்டார். இவ்வேளையில் குருக்கள் ஒருவரும் யாரும் எதிர்பாராத விதமாக ஆலயத்திற்கு வந்திருந்தார்.

- வளரும்...



# இவ்வார ராசிபலன்

**26-05-2023 வெள்ளி தொடக்கம் 01-06-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். யோகமான காலம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிட்டும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். எண்ணங்கள் நிறைவேறும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆதாயம் தரும். உறவினர்கள் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கை நிறைவேறும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதார சிறப்பு தரும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**ரிஷபம்:** லஷ்மி கடாட்சம் பெருகும் வாரம். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். உன்னதம் நிறைந்த காலம். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மற்றவர்கள் தொல்லைகள் குறையும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். கையிருப்பு கரையும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணங்கள் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வருமானத் தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. சிந்தனை வளர்க்கப்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். புதியப்பொருள் சேரும். அந்நிய தேச பயணம் உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும் அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**மிதுனம்:** சாதனை படைக்கும் வாரம். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. நவகிரஹ, அனுகிரஹம் உண்டு. வெகுமதி பெருகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனதில் ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். தேகப்பலம் கூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. செயல்பாட்டின் தீவிரம் கூடும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக்காரியம் ஜெயமாகும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். கர்மவினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரியபகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**கடகம்:** நன்மைகள் அதிகரிக்கும் வாரம். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. திடீர் செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தொல்லை தருகிறவர் விலகிடுவர். வயிற்று உபாதை வந்து சேரும். ட்ரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வு அமையும். சுபவிரயம் ஏற்படும். பயணத்தால் பலன் உண்டு. வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்பு பெருகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வியாபாரம் விருத்தியாகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**சிம்மம்:** பணமும், பாராட்டும் சேரும் வாரம். உறவினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். மருத்துவச் செலவுகள் குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். பிரச்சனைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் குழப்பங்கள் நீங்கும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். தனலாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப்பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். தேவைகள் பூர்த்தியாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**கன்னி:** விரக்திகள் மறையும் வாரம். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். காரியங்கள் கைக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்வி செலவு அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். குதூகலம் தாண்டவமாகும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 1,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,D




**துலாம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் லாபம் தரும். சந்தோஷமான சூழ்நிலைகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகமாகும். ஆனந்தம் பெருகும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். மனோ தைரியம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புத்திரர்களால் மேன்மை உண்டு. சுபச்செய்தி வரும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பணிவான பேச்சு அவசியம். விவசாயம் பலன் தரும். நண்பர்களால் உதவி உண்டு. பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். மனநிம்மதி தரும். இனிய தகவல் வந்து சேரும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இன்னல்கள் அகலும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B

(தொடர்ச்சி 30 பக்கம்)




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

மலேசிய மடல்

# 2023 கம்போடியா சீ விளையாட்டு: மலேசிய இந்தியர்கள் 5 தங்கம், 13 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்




நக்கீரன்

கம்போடியாவில் நடைபெற்ற 32-ஆவது சீ விளையாட்டு (South East Asian Games)ப் போட்டி தொடக்க நிகழ்ச்சியில் மலேசியக் குழுவில் கராத்தே நட்சத்திரம் ஷர்மேந்திரன் ரகுநாதன் கொடியேந்திச் சென்றார். இதற்கான அறிவிப்பை மலேசிய ஒலிம்பிக் மன்றத் தலைவர் டான்ஸ்ரீ முகமட் நோர்ஸ ா ஸக்காரியா இவ்வாண்டு ஏப்ரல் 27-ஆம் நாள் அறிவித்தார்.

இது, மலேசிய இந்திய விளையாட்டாளர்களுக்கு பெருமையாக அமைந்தது-டன் உற்சாகத்தையும் அளித்தது. கடந்த ஆண்டு ஹனோயில் நடைபெற்ற 31-ஆவது சீ விளையாட்டுப் போட்டியின் தாக்கம் தணிவதற்குள் இந்த ஆண்டிலும் அடுத்தப் போட்டி நடைபெற்று முடிந்ததுள்ளது.

32-ஆவது சீ விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட மலேசியக் குழுவில் 403 ஆண்கள், 274 பெண்கள் என 677 பேர் இடம்பெற்றிருந்தனர் இவர்களை 237 அதிகாரிகள் வழிநடத்தினர். இந்த 677 வீரர்-வீராங்கணைப் பட்டியலில் தேசியக் கொடியை ஏந்திச் செல்வதற்காக எண்மர் பட்டியலிடப்பட்டு, அவர்களில் மலேசிய விளையாட்டுத் துறைக்கு கடந்த காலத்தில் அளித்த பங்களிப்பு-வெற்றி ஆகியவற்றின் அடிப்படையில் ஷர்மேந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.








இதற்குமுன் 2003 ஹனோய் சீ விளையாட்டுப் போட்டியின்போதும் ஒரு தமிழ் வீரரான புவனேசுவரன் இராமசாமி, மலேசிய அணிவகுப்பிற்கு தலைமையேற்று ஜாலோர் கெமிலாங்கை ஏந்திச் சென்றது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், இந்த முறை மலேசிய அணியின் பதக்க அடைவு நிலை குறித்து, பொதுவாக அனைத்துத் தரப்பினருக்கும் மனநிறைவு தருவதாக இல்லை. இதற்கு, இளைஞர்-விளையாட்டுத் துறையின் இந்நாள்-முன்னாள் அமைச்சர்-களான ஹன்னா இயோ, கைரி ஜமாலுடின் ஆகியோர் வெளிப்படுத்திய கருத்துகளே தக்க சான்று இலக்கு வைக்கப்பட்ட தங்க வேட்டையை எட்டமுடியவில்லை என்பதைவிட கடந்த சீ விளையாட்டைன.

கம்போடியாவின் நோம்பென் நகரில் 11 நாட்கள் நடைபெற்ற 32-ஆவது சீ விளையாட்டுப் போட்டிக்கு சென்ற மலேசிய அணியின் மொத்த பதக்க இலக்கு 141 ஆக இருந்தது. இவ்வாண்டு ஏப்ரல் 30-ஆம் நாள் கொடி கையளிப்பு நிகழ்ச்சியின்போது விளையாட்டு அமைச்சர் ஹன்னா இயோ, 40 தங்கம், 37 வெள்ளி, 64 வெண்கலப் பதக்கங்களுக்கு மலேசியா இலக்கு கொண்டுள்ளதாக அறிவித்தார்.

மே 17-இல் நிறைவு நாளை எட்டியபோது தேசிய அணி 34 தங்கம், 45 வெள்ளி, 96 வெண்கலப் பதக்கங்களை வென்று, 11 நாடுகளில் ஒட்டுமொத்தமாக ஏழாவது இடத்தைப் பிடித்தது.

கடந்த முறை 6-ஆவது இடத்தில் நிலைத்த மலேசியக் குழு, இம்முறை ஓரிடம் சரிந்து 7-ஆம் இடத்தில் நிலைகொண்டது. குறிவைத்த மொத்த பதக்கங்களைவிட 34 அதிகமாகப் பெற்றிருந்தாலும் தங்க வேட்டையில் பின்னடைவு ஏற்பட்டது; இந்திய விளையாட்டாளர்களுக்கும் இந்தப் போட்டி பின்னடைவுதான். கடந்த முறையைவிட இந்த தடவை ஒரு தங்கம் குறைவாகவே கிடைத்தது.

ஒருவேளை 40 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தாலும்கூட, மலேசியாவிற்கு 7-ஆவது இடம்தான் கிடைத்திருக்கும் எனத் தெரிகிறது. சிங்கப்பூர் 51 தங்கப் பதக்கத்துடன் 6-ஆம் இடத்தைக் கைப்பற்றியது;

உபசரணை நாடான கம்போடியா 81 தங்கத்துடன் 4-ஆம் இடத்தைப் பெற்ற வேளையில், வியட்நாம் முதல் (136) இடத்தையும், அரசியல் நிலைத்தன்மை இல்லாத தாய்லாந்து 2-ஆம் (108) இடத்தையும் இந்தோனேசியா 87 தங்கங்களுடன் 3-ஆம் இடத்தையும் பெற்ற வேளையில் பிலிப்பைன்ஸ் 58 தங்கத்துடன் 5-ஆம் இடத்தில் நிலைகொண்டது.

மலேசியா வென்ற 34 தங்கப் பதக்கங்களில் இந்திய விளையாட்டாளர்கள் பிரேம் குமார், ஷாமலா ராணி சந்திரன், சூரிய சங்கர் அரி சங்கர், கொடிவீரர் ஷர்மேந்திரன் ரகுநாதன் நால்வரும் கராத்தே மூலம் 4 தங்கப் பதக்கங்களை வென்றனர் பிரேம் குமார், சூரிய சங்கர் அரி சங்கர், ஷர்மேந்திரன் ஆகிய மூவரும் இதேக் கராத்தேப் பிரிவில் வெள்ளியும் பெற்றனர்.

ஐந்தாவது தங்கத்தை ஷெரின் சாம்சன் வல்லபோய் ஓட்டப் போட்டி மூலம் பெற்றார்.

இந்தியர்கள் மொத்தத்தில் 13 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்களை வென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்திரன் ராமகிருஷ்ணன் குத்துச் சண்டையில் வென்ற வெண்கலமும் இதில் அடங்கும்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24



# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபடும் வாரம். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். காரியத்தடை அகலும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக்கடன் வசூலாகும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. தொழில் அபிவிருத்தி ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மனதில் சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். திறமையால் பெருமை சேரும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தோதான எண்ணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உணவுத்தொழில் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபெரிய பாளையத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,7,1,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**தனுசு:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பெருமைகள் சேரும். பழைய பாக்கி வசூலாகும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சியைத் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். பழைய பாக்கி வசூலாகும். சாதகமான சூழ்நிலை உருவாகும். வழக்குகள் வெற்றியை தரும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். வரவுகளால் திருப்தி உண்டு. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மங்களகரமான காலம். மின்சாரத்தில் சற்று கவனம் தேவை. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். குடும்ப சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விரயம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பெண்களால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வைத்தீஸ்வர முருகன், அதிர்ஷ்ட எண்: 8,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,O




**மகரம்:** வறுமைகள் விலகும் வாரம். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்புகள் கூடி வரும். சுபச்செய்தி வரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் வந்து போகும். கால்நடைகளால் நன்மை உண்டு. புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கை உண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. மனதில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. நிதி நிலைமை சீராகும். மெத்தனப் போக்கு மாறும். பொருள் இழப்பு ஏற்படும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நண்பர்களால் உதவி உண்டு. வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். காதல் கசக்கும். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிலும் விடாமுயற்சி அவசியம். நல்லோர்களின் நட்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபார விருத்தி ஏற்படும். உறவினரால் அனுகூலம் உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முதலீடுகளில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கர்ம வினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** வியாபார லாபம் அதிகரிக்கும் வாரம். மனக்கசப்பு நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு இனிக்கும். உடல்நலம் மேம்படும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும் மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். துன்பங்கள் அகலும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். சேமிப்பு வளரும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். நட்பு வட்டம் விரிவடையும். வேண்டும் வரம் கிடைக்கும். நலமே விளையும் இனிய வாரமாகும். புண்ணியம் சேரும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பண நடமாட்டம் கூடும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்ட காலம் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K


## ஆன்மீக அறிவையும் வளர்ச்சியையும் எளிதாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒரு முக்கிய அறிவிப்பு!

**இப்போது சேரவும்!:**
https://events.kailaasa.org/mahaparamashivoham




ஒரு குறிப்பிடத்தக்க வகையில், குரு பூர்ணிமா வரை முற்றிலும் இலவசமாக 21,000 அமெரிக்க டாலர் மதிப்புள்ள எங்களின் மதிப்பிற்குரிய நிகழ்ச்சியான மஹாபரமசிவோஹத்தை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆழ்ந்த தனிப்பட்ட மாற்றம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியை எளிதாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது இந்த நிகழ்ச்சி, அதன் மகத்தான மதிப்பை பிரதிபலிக்கும் அளவில் பொதுவாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆன்மீகப் பயணத்தில் தனிநபர்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதனுடன் தொடர்புடைய கட்டணங்களைத் தற்காலிகமாகத் தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளோம். எந்தவொரு நிதிச் சுமையும் இன்றி இந்த நிகழ்ச்சியிலிருந்து பயனடைவதற்கு புதிய மற்றும் திரும்பி வரக்கூடிய பல்வேறு வகையான தனிநபர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதே எங்கள் நோக்கம்.

இந்த வரையறுக்கப்பட்ட நேர சலுகையானது விழிப்புணர்வைப் பரப்புவதற்கும், ஆன்ம தேடுதலை விரும்புவோருக்கு ஞான சூழலை உருவாக்குவதற்கும் எங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. நிதித் தடையை அகற்றுவதன் மூலம், அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் அகக் கைலாசத்துடன் மீண்டும் இணைவதற்கும், சுய ஆன்ம தேடுதலில் இறங்குவதற்கும் நாங்கள் இலக்கு வைத்துள்ளோம்.

21,000 அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இந்த நிகழ்ச்சியை, எந்தவித கட்டணமும் இன்றி, குரு பூர்ணிமாவின் மங்களகரமான தருணம் வரை பெற இந்த அசாதாரண வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறோம்.

சுய-உணர்தல் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வின் பகுதிகளை ஆழமாக ஆராய்வதன் மூலம் இந்த ஆன்மீக பயணத்தில் எங்களுடன் சேருங்கள்!

அமர்வில் சேர உள்நுழையவும்: https://events.kailaasa.org/mahaparamashivoham
அமர்வு நேரம்: இந்திய - இலங்கை நேரம்
06:00 AM - 11:00 PM ET
03:30 PM - 8:30 AM IST

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL
VACANT LAND · CONSTRUCTION




**NESAN** Subramaniam **416-908-5656**

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON.
M1B 2W1 canada

www.subra.com










26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்








உதயம் 1416 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 26, 2023


# கனடா – ஸ்காபுறோவில் இயங்கிவரும் "நம் தாயகம்" விற்பனை நிறுவனத்திற்கு சென்ற நண்பர்கள்




கனடா -ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் "நம் தாயகம்" வர்த்தக நிறுவனம் " தாயக உணர்வுடனும் தாய் மண்ணின் சுவையுடனும் என்ற இலட்சியத்தோடு செயற்பட்டு வருகின்றது.

இந்த நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் அனைத்து வன்னி பிராந்தியத்தில் இருந்து பெறப்படுகின்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

போரினால் கணவர்மாரை இழந்த கைம்பெண்கள் மற்றும் ஆதுரவற்றோர் வன்னியில் இயங்கும் இந்த "நம் தாயகம்" உற்பத்தி நிறுவனத்தில் பணியாற்றுகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மார்க்கம்-ஸரீல்ஸ் சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் இந்த "நம் தாயகம்" விற்பனை நிறுவனத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் சென்ற சமூக ஆர்வலர் விசு கணபதிப்பிள்ளை மற்றும் தென் புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோர் நிறுவனத்தின் பங்காளர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

இந்த நிறுவனத்தில் விற்பனையாகும் பொருட்கள் அனைத்தும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை என்பது நம்பகத்தன்மையுள்ள விடயமாகும்.

# NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA HOSTED 'PRESS FREEDOM DAY AT TORONTO CITY HALL'



**Last Friday 19th, May, 2023, 'Press Freedom Day' was hosted by National Ethnic Press & Media Council of Canada, at the Toronto City Hall.**
**The President of the National Ethnic Press & Media Council of Canada, Mr Thomas Saras delivered the President Speech and he mentioned that each and every member of this council should join together to protect Press Freedom.**
**Few members of the Council and few other Scholars were awarded by the Council, for the dedicated services in the field of Journalism.**
**A South Indian Classical dance was performed by the students of Sakthi Narthanalaya Dance School in Scarborough.**



# கனேடிய அரசு மற்றும் அதன் பிரதமர் மீது இனவாதத்தை உமிழ்ந்த இலங்கை அமைச்சர் – *சிவா பரமேஸ்வரன்*

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18ஆம் திகதியை தமிழின படுகொலை நாளாக கனடா அறிவித்துள்ளதற்கு இலங்கை நாடாளுமன்றத்தில் கடும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. தமிழர் தரப்பு கனேடிய பிரதமருக்கு நன்றி கூற, சிங்கள தரப்பில் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தது.

இனப்படுகொலை என்ற வார்த்தையைக் கேட்டாலே இலங்கை அரசிற்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் ஒவ்வாவை ஏற்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு தகாத அல்லது கேட்கப்படக்கூடாத வார்த்தையாகவே உள்ளது என்பதை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அந்த வாதப்பிரதிவாதங்களின் போது காண முடிந்தது.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# விநாயகர் விமர்சனம் "தமிழ்ச் சமூகம் மீண்டும் அறிவுசார் சமூகமாக மாற வேண்டும்"

கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

கண்ணுடையர் என்பார் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (அதிகாரம்: கல்வி குறள் 393)

உயர்தரப்பரீட்சை மதிப்பீட்டுப்பணியில் ஈடுபட்டுள்ள ஒரு இஸ்லாமிய நண்பருடன் அவர்களின் இன்றைய கல்வி நிலை பற்றிப் பேசினேன். 1970களின் இறுதியில் ஆரம்பித்த இலங்கை முஸ்லிம்களின் நவீன கல்விப்பாய்ச்சல் இன்று எவ்வாறு மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பதை அவர் விளக்கினார். வியாபாரிகளின் சமூகமாக பெரும்பாலும் அடையாளப்படுத்தப்பட்ட அச்சமூகம் இன்று அதிகளவு கல்விமான்கள் வைத்தியர்கள் பொறியாளர்கள் கணக்கியலாளர்கள் முகாமையாளர்கள் கணிணி வல்லுநர்கள் நிருவாக அதிகாரிகள் சட்டத்தரணிகள் என்று பொருளாதார ரீதியில் வலுவானதொரு கற்றோர் சமூகமாக மாறியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோவில் கலாநிதி வே. இலகுப்பிள்ளையின் 'அணுவைத் துளைத்து' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவரும் அணு விஞ்ஞானியும் பேராசிரியரும் தொழிலதிபரும் கனடிய அரசியல் செயற்பாட்டாளருமான கனடா வாழ் கலாநிதி வே. இலகுப்பிள்ளை அவர்களின் 'அணுவைத் துளைத்து' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28-05-2023 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4.00 மணிக்கு ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவிற்கு ஓய்வு பெற்ற அதிபர் சின்னையா சிவனேசன் அவர்கள் தலைமை தாங்குகின்றார்.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

